192.

# ஐக்கிய அரசு

மலர்-1 இதழ்-4

ஏப்ரல் - 1934.

JL
VIN m N34 I K.
N34.1.4
148728

# ஐக்கிய அரசு

## (Co-operative Commonwealth)

MONTHLY ORGAN OF 192.

THE YOUNG CO-OPERATORS LEAGUE

மலர் 1. எப்ரல். இதழ் 4.

பொருளடக்கம்.

OFFICE OF THE REGISTRAR OF C. O. S.
10 OCT 1934
MADRAS

பக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | கூட்டுறவு ஆட்சி ... | 1 |
| 2. | கிராமங்களின் தற்கால நிலைமை ... | 5 |
| 3. | கூட்டுறவாளர் மகாநாடு ... ... | 13 |
| 4. | உபாத்திமார்கள் மகாஜன சபைக்கூட்டம் ... | 17 |
| 5. | மேல்நாடும் கீழ்நாடும் ... ... | 19 |
| 6. | கூட்டுறவு இயக்க நிலைமை ... ... | 21 |
| 7. | சென்னையில் கூட்டுறவு இயக்கம் ... ... | 22 |
| 8. | மத்திய பாங்குகளில் பணப்பெருக்கு ... ... | 23 |


காரியாலயம் :

29, கீழ ஆண்டார் வீதி,

தெப்பக்குளம், திருச்சினப்பள்ளி.

1934

# "ஐக்கிய அரசு"

## யௌவன கூட்டுறவாளர் சங்க சஞ்சிகை.

போஷகர் :

டாக்டர் ஏ. மதுரம்.

சங்கத் தலைவர் :

P. B. K. ராஜா சிதம்பரம்.

காரியதரிசி :

என். எஸ். கோவிந்தசாமி.

கௌரவ ஆசிரியர் :

எஸ். ஜே. ரெத்தினசாமி, M.A., B.



### சந்தா விபரம்.

உள் நாடு வருடம் 1-க்கு ரூ 5—0—0.

வெளி நாடு ,, ரூ 6—0—0.

முன் பணமின்றி பத்திரிகை அனுப்பப்பட மாட்டாது.

10 பத்திரிகைகளுக்கு சந்தாதார்களைச் சேர்த்து அனுப்புவோருக்கு ஓர் பத்திரிகை அனுப்பிவைக்கப்படும்.

### விளம்பர விகிதம்.

4 வது பக்கம் அட்டை ரூ. 30—0—0.

3 வது பக்கம் அட்டை ரூ. 25—0—0.

சாதாரண விளம்பரம் பக்கமொன்று ரூ. 20—0—0.

முன் பணமின்றி விளம்பரம் ஏற்கப்பட மாட்டாது. விளம்பரத்தை அங்கீகரிக்கவோ மறுக்கவோ மானேஜருக்கு உரிமையுண்டு.



# ஐக்கிய அரசு

(CO-OPERATIVE COMMONWEALTH)

STANDS FOR

BETTER FARMING, BETTER BUSINESS, BETTER LIVING.

1934 ஏப்ரல் திருச்சி


## கூட்டுறவு ஆட்சி

சென்னை மாகாணத்தில் கூட்டுறவு இயக்க நிலைமையைப்பற்றி 1933-ளு ஜூன்-மீ இறுதியுடன் ரிஜிஸ்திரார் அறிக்கை வெளிவந்துள்ளது. அதனை அடுத்தார்போல் அபிவிருத்தி இலாக்கா அறிக்கையும் வெளிவந்திருக்கிறது. இவற்றின் மூலம் இம்மாகாணத்தின் உண்மையான நிலையை நாம் ஓர் அளவு தெரிந்துக்கொள்ளலாம் "இன்றையதினம் கூட்டுறவாளர்கள் ஓர் உண்மையைக் கண்ணியமாக ஒப்புக்கொள்ளவேண்டி இருக்கிறது. அதாவது, கூட்டுறவு இயக்கம் அடைந்துள்ள வெற்றிகள் பலவற்றைவிட அதனால் ஏற்பட்டுள்ள தோல்வியே பொதுஜனங்கள் மனதைக் கவர்ந்திருப்பதாகும்" என்ற இம்மொழிகள் பிரபல கூட்டுறவாளரும், சென்னை மாகாண மத்திய பாங்கின் தலைவருமான திரு. வி. ராமதாஸ் பந்துலு அவர்கள் கூறியதாகும். பெரியார் திரு. ராமதாஸ் அவர்களின் ஆணித்தரமான அபிப்ராயத்தை நாம்முழுமனதுடன் ஆதரிப்பதுடன், கூட்டுறவு இயக்கத்தின் இன்றைய நிலையும் இதைப் பொறுத்ததாகவே இருக்கிறதெனக் கூறவிரும்புகிறோம்.

கூட்டுறவு இயக்கத்தில் அரசியல் பிரசினைகளை நுழையவிடக் கூடாதென ரிஜிஸ்திரார் எச்சரிக்கை செய்துள்ளார். இது சமயம் இத்தாலி தேசக்கூட்டுறவு சரித்திரம் நமது நினைவுக்கு வருகிறது. இத்தாலி தேசத்தில் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும் ராஜீயக் கக்ஷிகளுக்கும் எப்பொழுதும் இடைவிடாத சம்பந்தமுண்டு. ஏனைய தேசங்களில் இத்தகைய சம்பந்தமில்லை. இத்தாலி தேசத்தில் இரண்டு பெரிய ராஜீயக் கட்சிகள் இருந்துவந்தன. அவை, கத்தோலிக்கர்களென்றும், சோஷலிஸ்ட்களென்றும் பெயருடையன. இவ்விரு கட்சியினர்களின் நோக்கமும் காரியமும் ஒன்றுக்கொன்று எவ்விதத்திலும் சம்பந்தப்படாது. இம்மாதிரி மாறுபட்ட இரு சாரார் கூட்டுறவு சங்கங்களுக்குள் நுழைந்துகொண்டு வேலை செய்யத் தலைப்பட்டதால் அவரவர்கள் சங்கங்கள் அவரவர்கள் கட்சியின் நோக்கம்போலவே நடத்தப்பட்டது. இவ்விரு கட்சியினரும் தங்கள் ராஜீயப் போராட்டத்திற்கு பக்கபலமாக அநேக ஆயிரம் சங்கங்களை வைத்துக் கொண்டதால் அவரவர்கள் ராஜீய அதிகாரம் நடத்திய காலத்தில் அவரவர்கள் சங்கங்கள் வலுத்தன ஏனைய சங்கங்கள் தாழ்ந்தன. இம்மாதிரி அரசியல் கட்சிகள் கலந்து கொண்டதால் கூட்டுறவு உண்டாக வேண்டிய இடத்தில் கலகங்கள் ஏற்பட்டது. இயக்கத்திற்குப் பலக்குறைவு உண்டா

யிற்று. ஆனால், 1923-ம் ஆண்டில் இத்தாலி தேசத்தில் புதியதோர் மாறுதல் ஏற்பட்டது பாஸிஸ்ட் கட்சி என்ற புதியதோர் அரசியல் கட்சி தோன்றலாயிற்று. இக் கட்சியாரின் செல்வாக்கு அதிகரிக்கவே இத்தாலி தேசத்தின் கூட்டுறவுச் சங்கங்களுக்கெல்லாம் மத்தியமான ஸ்தாபனமாகிய தேசிய பெடரேஷன் பாஸிஸ்ட் கட்சியாரின் ஆதிக்யத்திற்கு வந்தது. அதனால் தேசிய பெடரேஷன் சில மாறுதலை அடைந்தது. பெடரேஷனைச் சேர்ந்த சில அங்கத்தினர்கள் வெளியேற்றப்பட்டனர். புதிய பேர்களுக்கு ஸ்தானம் அளிக்கப்பட்டது. மற்றும் இயக்கத்தில் தேசிய பெடரேஷன் ஈடுபடுத்தப்பட்டது. இந்நிலை இந்நாட்டில் ஏற்படுதல் எளிதே. ஸ்தல ஸ்தாபனங்களில் சம்பந்தமுடையோரும், சட்டசபை மோகங் கொண்டோரும், கூட்டுறவு ஸ்தாபனங்களில் இருக்கும் வரையில் இத்தாலியின் நிலைமை இந்நாட்டில் ஏற்பட்டே தீருமென்போம். அதனைத்தடுக்க எவராலும் இயலாது என்பதை குன்றின்மேல் நின்றும் கூறத்தயங்கோம்.

கூட்டுறவுச் சங்கங்கள் நிர்வாக காலத்தில் நாணயக் குறைவாக நடந்ததற்காக 75 பேர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. கூட்டுறவு ஸ்தாபனங்களில் அங்கத்தினர்களாக இருப்போர் சுமார் ஏழு லெட்சமாகும். இவ்வளவு அதிகமான எண்ணிக்கையுள்ள அங்கத்தினர்கள் நிறைந்த இயக்கத்தில் 75 பேர்கள் அயோக்கியர்கள் இருப்பது இயல்பே. இது அவ்வளவு பிரமாதமான எண்ணிக்கையுமன்று. ஆனால், நம் நாட்டில் கூட்டுறவு இயக்கத்தில் நம்பிக்கை இல்லாதோரும், கூட்டுறவு இயக்கத்தைப்பற்றி குறை கூறுவதே தொழிலாக உள்ளோரும் பலர் உண்டு. இத்தகையோர் கண்ணுக்கு ஏழு லெட்சம் பேர்களில் 75 அயோக்கியர்கள்தான் புலப்படுவார்களேயன்றி ஏனைய யோக்கியர்கள் தென்படார்கள். எனவே, கூட்டுறவு இயக்கத்தில் பொதுஜனங்களுக்குக் கெட்ட அபிப்ராயத்தை உண்டுபண்ண 75 அயோக்கியர்களே போதுமானதாகும். இத்தகையோர் எண்ணிக்கை குறைய வேண்டுமானால் குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனை விதிக்க வேண்டும். குற்றம் புரிவோர் எவராய் இருப்பினும், எவ்வளவுதான் செல்வாக்கு உடையோராக இருப்பினும், அவர்கள் மண்டையில் அடிக்கவேண்டும்; மீண்டும் தலை தூக்க வொட்டாது தடுக்கவேண்டும்.

148728

இவ்வாண்டில் 366 சங்கங்களின் பஞ்சாயத்தார்கள் நீக்கப்பட்டிருப்பதாகவும், அவர்கள் ஸ்தானத்தில் ஏஜண்டுகள் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. பணவசூல் செய்கிற விஷயத்தில் ஏஜண்டுகள் நியமனம் ஏற்கத்தக்கதே. இன்றைய தினம் கூட்டுறவுச் சங்கங்களின் மோசமான நிலைக்குக் காரணம் பஞ்சாயத்தார்களும், மற்றும் நிர்வாகஸ்தர்களும், சங்கங்களிலிருந்து கடன் பெற அனுமதிப்பதாகும். இது காரணமாக, பஞ்சாயத்தார்களில் கடன்படாமல் எவரும் இருப்பதில்லை. இவர்கள் தாங்கள் வாங்கிய கடனைக் குறித்தகாலத்தில் திருப்பிச் செலுத்துவதில்லை, அதனால் ஏனைய அங்கத்தினர்களையும் கண்டித்து வசூல் செய்ய இவர்களால் முடிவதில்லை. எனவே, கிராமச் சங்கங்களில் பஞ்சாயத்தார்களாகவோ, நிர்வாகஸ்தர்களாகவோ உள்ளோர் சங்கத்திலிருந்து கடன்பெறக் கூடாதென்ற விதி இன்றுள்ள சங்கங்களில் சேர்க்கப்பட வேண்டும். இனி பதிவு செய்யப்படும் சங்கங்களில் ரிஜிஸ்திரார் இவ்விதியைக் கட்டாயப் படுத்தவேண்டும். மேலும், கிராமச் சங்கங்களின் காரியாதிகளைப் பார்க்க கௌரவ உத்தியோகஸ்தர்களைக்



காட்டிலும் சம்பளக்காரர்களை நியமிப்பது மேலென்போம். பட்டாதாரிகள் மிகுந்துள்ள இந்தக்காலத்தில் அவர்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் பயன்படுத்திக் கொள்வதே அறிவுடைமையாகும்.

பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் மொத்தம் 13,000 என்றால், இவ்வாண்டில் 691 சங்கங்கள் ரத்து செய்யப்பட்டிருப்பதாகவும், 1,718 சங்கங்கள் ரத்து செய்யப்படவேண்டிய நிலையில் கேவலமாக இருப்பதாகவும், 5000 சங்கங்கள் வேலை செய்யாமலே இருப்பதாகவும், இது போக எஞ்சிய சங்கங்களில் 348 சங்கங்கள்தான் திருப்திகரமான நிலையில் இருப்பதாகவும் தெரிகிறது. இதன்மூலம் நமக்கு விளங்குவதென்ன? தேவையற்ற இடங்களில், தேவைக்குமேல் அதிகமான சங்கங்கள் நிறுவப்பட்டிருக்கின்றனவென்றே கூறவேண்டும். எனவே, சங்கங்கள் பல வேலை செய்யாதது குறித்து ஆச்சரியப்படுவதற்கோ அல்லது பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் ரத்து செய்யப்பட்டதற்கு வருந்துவதற்கோ இடமில்லை.

கிராமச் சங்கங்கள் மத்திய பாங்குகளுக்குச் செலுத்தவேண்டிய பணம் தவணைப்படி செலுத்தப்படவில்லை என்றும், இந்நிலை முன்னைவிட பிற்போக்கானதாக இருப்பதாகவும் தெரிகிறது. ஆனால், தற்போதைய காலநிலையை அனுசரிக்குமிடத்து கிராமச்சங்கங்களைக் குறை கூறுவதற்கில்லை என்ற ரிஜிஸ்திராரது அபிப்ராயத்தை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். தற்போதுள்ள கால நிலையில் மாறுதலேற்படுமாகில் கிராமச் சங்கங்கள் தங்கள் கடமையைச் செலுத்தத் தவாறதென்பதையும் ஆமோதிக்கிறோம். எனினும், இன்றையதினம் கிராமச் சங்கங்கள் தடுமாறுவதற்கும், மத்திய பாங்குகள் திணறுவதற்கும், கூட்டுறவுப் பண்டிதர்கள் வகை தெரியாது திகைப்பதற்கும் காரணம் சுபேட்சகரமான காலத்தில் கண்மூடித்தனமாகக் கடன் கொடுக்கப்பட்டதும், கண்மூடித்தனமாகக் கடன் வாங்கப்பட்டதுமே யாகுமென்போம். மேலும், கொடுக்கப்பட்ட கடன் செல்வவிருத்திக்கான துறையில் விவசாயத்திற்கோ, வியாபாரத்திற்கோ, அல்லது கைத்தொழிலுக்கோ செலவு செய்யப்படாமல் வீணாக விரயம் செய்யப்பட்டதால் விளைந்த தீமை என்றும் கூறுவோம். மத்திய பாங்குகள் கிராமச் சங்கங்களின் அங்கத்தினர்களிடமிருந்து சேரவேண்டிய பாக்கி, ஆஸ்தி பொறுப்பு, முதலியவற்றை பரிசீலனை செய்து தீவிரமான நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென ரிஜிஸ்திரார் கூறுகிறார். இது நல்ல யோசனையே. பள்ளம் விழுமானால் நஷ்ட ஈட்டுக்கென இது வரையில் மத்திய பாங்குகள் ஒரு லெட்ச ரூபாய் வரையில் ஒதுக்கி வைத்திருக்கின்றன. ரிஜிஸ்திரார் யோசனை ஏற்கப்படுமாகில் இந்த ஏழு லெட்ச ரூபாயும் மத்திய பாங்குகளுக்கு நல்ல சேமிப்பாகும்.

கிராமச் சங்கங்களின் தணிக்கைப்பொறுப்பு தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கு அளிக்கப்படாவிடினும் தணிக்கைக்கென வசூலிக்கப்படும் கட்டண விகிதம் குறைக்கப்படவேண்டும். இது விஷயத்தில் ரிஜிஸ்திரார் செய்துள்ள சிபார்சுகளை சர்க்கார் ஏற்பது உசிதமாகும்.

வியாபார மந்தத்தை உத்தேசித்தும், அகவிலைக் குறைவை அனுசரித்தும், கிராமச் சங்கங்கள் கடன் வாங்குவதை நிறுத்தி விட்டன. பஞ்சாயத்தார்கள் அங்கத்தினர்களுக்குப் புதிதாகக்கடன் கொடுக்க அஞ்சுகிறார்கள். இதுகுறித்து கிராமச் சங்கங்களை நாம் போற்றுகிறோம். எனினும், ஒழுங்கான முறையில் யோக்கியப்பொருப்பாக நடந்துகொண்ட அங்கத்தினர்களுக்கு கடன் கொடுத்து உதவவேண்டியதைக் கிராமச்சங்கங்கள் தங்கள் கடமையாகக் கருதவேண்டும். கிராமச்சங்கங்கள் பணம் வாங்காமை காரணமாக மத்தியபாங்குகளில் பணப் பெருக்கேற்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. வட்டி விகிதம் ரிஜிஸ்திரார் ஆலோசனையின்படி குறைக்கப்பட்ட போதிலும் போதிய அளவு குறைக்கப்பட்டதாகச் சொல்ல முடியாது. திரு. பாந்தாரி கூறுவது போல் கிராமச்சங்கங்கள் அங்கத்தினர்களுக்கு 100-க்கு 6 விகிதம் கொடுக்கக்கூடிய முறையில் மத்திய பாங்குகள் கிராமச் சங்கங்களுக்குப் பணஉதவி புரிய வேண்டுமென்போம். தற்போதைய நெருக்கடியான நிலையை சமாளிக்க இதுவே தக்கவழியாகும். நிற்க, நகை ஈட்டின் பேரில் மத்திய பாங்குகள் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்களுக்குப் பணம் கொடுப்பதை சர்க்கார் அனுமதிக்காதது வருந்தத்தக்கதாகும்.

திரு. ராமதாஸ் கூறுவது போல் சர்க்காரது இத்தகைய செய்கை கூட்டுறவு இயக்கத்தில் அவர்களது குறுகிய மனப்பான்மையையே காட்டுகிறது. மத்திய பாங்குகள் மாத்திரமல்ல, கிராமச்சங்கங்களும் நகை ஈட்டின் பேரில் பணம் கொடுக்க அனுமதியளிப்பதே இதுகாலை கூட்டுறவாளர்கள் அனுஷ்டிக்க வேண்டிய முறையாகும். இதனை சர்க்கார் உணரும் காலம் விரைவில் கிட்டுமென நம்புகிறோம்.

இறுதியாகக் கூறுமிடத்து, கூட்டுறவுச்சங்கங்கள் புதியதாக எதுவும் அதிகமாகப் பதிவு செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. இதிலிருந்து கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்ய எவரும் முன் வரவில்லை என்று சொல்வதற்கில்லை. புதிய சங்கங்களைப் பதிவு செய்வதில் கூட்டுறவு இலாக்கா போதிய அக்கறைகாட்டவில்லை என்றே நினைக்கவேண்டி இருக்கிறது. புதிய சங்கங்களை, புதிய முறையில், புதிய இடங்களில் அமைத்து, பதிப்பித்து, நடத்துவதில் பொதுவாகக் கூட்டுறவாளரும், குறிப்பாக கூட்டுறவு இலாக்கா குழுவினரும் அக்கறை காட்டுவார்களாக!

## சென்னை தொழிலாளர் பாங்கு

சென்னை தொழிலாளர் கூட்டுறவு பாங்கின் ஆண்டுவிழா சௌந்தர்ய மஹாலில் மந்திரி கனம் பி. டி. ராஜன் அவர்கள் முன்னிலையில் திரு. வி. பாசுதேவ் பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஸி. அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இந்த பாங்கு நிறுவப்பட்டதின் பெருமை மாஜி கூட்டுறவு டிப்டி ரிஜிஸ்திரார் திரு. வி. டி. நாயகம், சென்னை ஜில்லா மத்தியபாங்கு மாஜி காரியதரிசி திரு. ஸ்ரீராம்பாபு, சென்னை மண்ணெண்ணைத் தொழிலாளர் சங்கப்பொதுக் காரியதரிசி திரு. டி. எம். பாரதசாரதி ஆகியோருக்கு உரியது. தொழிலாளருக்கும் முதலாளிகளுக்கும் கூட்டுறவும் நட்புரிமையும் இருக்கவேண்டும் என்பதற்கு சென்னை கூட்டுறவு பாங்கு ஓர் அறிகுறியாகுமென கனம் பி. டி. ராஜன் கூறியுள்ளதை நாம் முழுமனதுடன் ஆதரிக்கிறோம். இந்த பாங்கு பதிவு செய்யப்பட்ட ஒரு வருஷத்தில் ரூ. 53,000 அங்கத்தினர்களுக்குக் கடனாகக் கொடுத்திருக்கிறது. பங்குத் தொகையின் மூலமும், ரிக்கரிங் டிபாசிட்டு மூலமும் ரூ. 30,000 நிதியாக இப்பாங்கில் சேர்ந்துள்ளதென்பது மெச்சத்தக்கது. சென்னை நகரில் ஜில்லா மத்திய பாங்கிலிருந்து அதிகமாகக்கடன் வாங்குவதிலும், தவணைப் பிரகாரம் தவக்கமின்றி வாங்கிய கடனைச் செலுத்துவதிலும், இந்த பாங்கு முதன்மையானதாக இருக்கிறதென்பது மகிழ்ச்சியை அளிப்பதாக இருப்பதுடன், தொழிலாளருக்கு பெருமையைக் கொடுப்பதாகவும் இருக்கிறது. "சிக்கனமான வாழ்வு நடத்தவும், மிச்சம் பிடிக்கவும் கூடிய முறையைப் போதிக்கக் கூடிய வகையில் சிப்பந்திகள் சங்கம் திருத்தி அமைக்கப்படுமாகில் அவைகளின் தேவையை நாம் ஏற்கலாம். இவ்விதமாக இரண்டொரு சங்கங்கள் நடந்து வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவை தங்களின் மாதாந்திர சம்பளத்திலிருந்து மிச்சம் பிடிப்பதென்ற பழக்கத்தைக் கட்டாயப்படுத்தி வருகின்றன. அதன் மூலம் நன்றாக வேலை செய்கின்றன," என ரிஜிஸ்திரார் அவர்கள் உபாத்திமார்கள் சங்க மகாஜன சபைக் கூட்டத்தில் கூறியுள்ளதற்கு சென்னை தொழிலாளர் கூட்டுறவு பாங்கு ஓர் உதாரணமாகும். இந்த பாங்கின் இன்றைய மேன்மையான நிலைமைக்கு நிர்வாகஸ்தர்களின் திறமையும், முதலாளிகளின் ஒத்துழைப்புமென்பதில் ஐயமில்லை. இந்த பாங்கு என்றும் முதன்மையான ஸ்தானத்தை வகித்து வரவேண்டுமென விரும்புகிறோம்.

## எது சரி?

"மேம்பார்வை வேலைகளை மத்திய பாங்கிற்குப் பதிலாக செய்துவரும் ஜில்லா பெடரேஷன்கள் பயனற்றதும், வீண் பொருள் விரயத்திற்குறியதும், சிக்கலானதுமான ஸ்தாபனங்களென்பதே எனது திட்டவட்டமான அபிப்பிராயமாகும்" என திரு. வி. ராமதாஸ் பந்துலு கூறுகிறார்.

"ஜில்லா பாங்குகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டிய காலம் நெருங்கி விட்டது. ஜில்லா பாங்குகளின் நிர்வாக சபை அங்கத்தினர்கள் எண்ணிக்கையைக் குறைப்பதால் மாத்திரம் பிரமாதமான பணம் எதுவும் மிச்சப்பட்டு விடாது" என திரு. கெ. எல். பந்தாரி செப்புகிறார். இவர்கள் இருவர் கூற்றில் எது சரி?



# கிராமங்களின் தற்கால நிலைமை

## II

தானியங்களிலும், மற்ற உணவுப்பொருள்களிலும் உள்ள புஷ்டியைக் கொடுக்கும் சத்தானது பெரிதும் விவசாய முறையை அடுத்திருக்கிறது. புஷ்டியைக் கொடுக்கும் உணவுப் பொருள்கள் வியாதியைக் குறைக்கின்றன. நாம் சாப்பிடும் உணவுப்பொருள்கள் புஷ்டியைக் கொடுக்கும் தன்மை யற்றிருந்தால் புஷ்டியைக் கொடுக்கக்கூடிய பதார்த்தங்களை நாம் நம் உணவோடு சேர்த்து உண்ணவேண்டும். இது விஷயத்தில் இன்னும் பரிசோதனைகளையும் ஆராய்ச்சிகளையும் செய்தால்தான் இவை ஒரு சீரான நிலைக்கு வரும்.

ஆகாரங்களின் குணமதிப்பும், ஆகாரங்களுக்கும் வியாதிகளுக்குமுள்ள சம்பந்தமும் சமீபத்தில்தான் பிரஸ்தாபத்திற்கு வந்திருக்கிறது. இது சம்பந்தமாக இந்தியாவில் ஆராய்ச்சி செய்வதற்கு பெரு முயற்சி இதுவரை ஏற்படாவிடினும் பிரத்தியேகமாகச் சிலர் ஜெயிலில் கைதிகளுக்குக் கொடுக்கும்படியான உணவுகளைப் பரிசோதித்ததில் சில உண்மைகள் வெளியாயின. சாதாரணமாக, தேக வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்திற்கும், ஆகாரம் ஒரு முக்கியமான சாதனம் என்றும், புஷ்டியற்ற ஆகாரத்தை உண்பதால் திடக்குறைவும், மற்றும் பல குறைகளும் ஏற்படும் என்பதும் யாவரும் அறிந்ததே. அரிசி ஆகாரம் உட்கொள்ளுபவர்கள் அதிகமாக ஆகாரத்தை உட்கொள்வதால் அதிலிருக்கும் புஷ்டியை எல்லாம் கிரகித்துக்கொள்ள முடிகிறதில்லை. ஆனால் அரிசியோடு கொஞ்சம் கோதுமையைச் சேர்த்தால் அதிகமான புஷ்டியை நாம் அடையலாம். ஆகவே, அரிசி, கோதுமை, பருப்பு, மாம்சம், மீன் இவைகள் சேர்ந்த ஆகாரமே முதல்தரமான ஆகாரமாகும்.

### மீன் ஆகாரம்

இந்நாட்டிலே மீனை ஜனங்கள் ஆகாரத்தில் அதிகமாக உபயோகிப்பதற்கு ஏற்றவாறு மீன் பிடிக்கும் தொழில் அபிவிருத்தி அடையவில்லை. இந்நாட்டின் சில பாகங்களிலே மீனை ஆகாரத்தில் உபயோகிப்பதில் சிலருக்கு மதசம்பந்தமான ஆக்ஷேபனைகளிருக்கின்றன. ஆனால் வங்காளத்திலும் சென்னையிலும் ஐந்தில் நான்கு பங்கு ஜனங்கள் மீனை உபயோகிக்கிறார்கள். பர்மா தேசத்திலே இம் மீனை ஒரு விதமாக உப்பிட்டுப் பக்குவப்படுத்தி ஜனங்கள் அதை உபயோகிக்கிறார்கள். இம்மாதிரியே இந்தியாவின் ஏனைய மாகாணங்களிலும் ஜனங்கள் இதை உபயோகிக்கிறார்கள். ஜனங்கள் சாப்பிடும் அரிசி ஆகாரத்துடன் மீனையும் சேர்த்து உண்ணல் சாலச்சிறந்தது. ஜனங்களின் சுகத்தையும் மேம்பாட்டையும் நாம் அதிகரிக்கவேண்டுமானால் இம்மாதிரியான உணவுப் பொருள்கள் கிராமத்தாருக்குக் கிடைக்கும்படியான வசதிகளை அரசாங்கத்தாரும் பொதுஜன ஊழியர்களும் செய்து கொடுக்கவேண்டும். ஜில்லா போர்டாரும், கிராம ஜனங்களும் இம்மாதிரியான மீன் இருக்கும்படியான குளங்களைப் பாதுகாத்து வரவேண்டியதும் அவசியம். சுகாதார ஆபீசர்களும் ஜனங்களுக்கு மீன் சாப்பிடுவதில் உண்டாகும் அனுகூலங்களை எடுத்துச் சொல்லவேண்டும்.

### ரஸ்தாக்களும் போக்குவரத்து வசதிகளும்

இது வரையில் நாம் குடியானவனின் ஆரோக்கியத்திற்கனுகூலமான சில அம்சங்களைப்பற்றிக் கவனித்தோம். இவைகள் மிகவும் அவசியமானவை; எனினும் மற்றும் பன் முறைகளாலும் கிராமங்களின் சுகாதார நிலைமையையும், மற்றும் ஜனங்களின் பொது நிலைமையையும் நாம் மேம்படுத்தலாம். இம்மேம்பாடுகளை நாம் செய்தால் சுகாதாரப் பிரசாரம் முதலியவை எல்லாம் வெகு எளிதில் செய்யமுடியும்.

போக்கு வரத்துக்கேற்ற நல்ல மார்க்கங்கள் குடியானவர்களின் தானியங்களை விலையாக்குவதற்கு ஒரு ஏற்ற சௌகரியமாகும். விவசாயப் பொருள்களை இடம் மாற்றுவதற்கு ஏற்படும் சௌகரியமானது பொதுவாகக் கிராம மேம்பாட்டிற்கே அனுகூலமாயிருக்கிறது. மோட்டார் பிரயாணிகள் போக்குவரத்தினால் கிராமத்தில் விளையும் பண்டங்களுக்கு அதிகமான கிராக்கி ஏற்படும். இம்மாதிரிச் சிறு கிராமங்களை ஒரு

பெரிய பட்டணத்துடன் இணைப்பதால்தான் கிராமங்களுக்கு உதவிபுரிவதற்கும் சிறிய கைத்தொழில் அபிவிருத்திக்கு வேண்டிய தொழிலாளர்களைச் சேர்க்கவும் வசதி ஏற்படுகிறது. மேலும், குழந்தைகளின் படிப்பும் அதிகரிக்கும். தபால் தந்தி வசதிகளும் கிராமங்களில் அதிகமாய் பரவும்.

கிராமங்களில் தற்காலத்தில் ஏற்பட்டு வரும் பல்வகை மாறுதல்களைப்பற்றியும், கிராம நிர்வாக விஷயத்தில் கிராமத்தார் அடைந்துள்ள பொறுப்புகளைப் பற்றியும், முன்னம் கூறியுள்ளோம். சுகாதார விஷயமாயும், ஆகார விஷயமாயும் சில விஷயங்களை எடுத்துரைத்தோம். தற்காலத்தில் அதிக விரைவாகப் பரவிவரும் மாறான நிலைமைகளுக்கேற்ப நடந்து கொள்ளவும், பலவிதமான சாஸ்திரப் பயிற்சிகளின் நுட்பங்களை நன்கறிந்து கொண்டு பயனடையவும், கிராமத்தாருக்கு எவ்விதமான உதவி செய்ய வேண்டுமென்பதையும் பற்றிக்கவனிப்போம்.

கிராமப் பொது நலத்திற்கும் நன்மைக்கும் சுனைபோன்றிருந்த சமூக வாழ்வு பாழடைந்தும், பழமையான குடும்பத்தொழில்களும், கிராமத்துக் கைத்தொழில்களும் இருப்பிடமில்லாமல் அழிந்துபோனதைப்பற்றியும் யாவரும் அறிவர். இவையெல்லாம் தற்காலத்தில் பரவிவரும் புதிய நோக்கங்களின் அறிகுறியாகும். இம்மாதிரியான குறைகளெல்லாம் சிறுநகரங்களையடுத்திருக்கும் கிராமங்களில்தான் அதிகமாகக் காணப்படுகிறது. இம்மாதிரியான ஒரு புதிய உணர்ச்சியினால் ஏற்பட்டிருக்கும் மாறுதல்களை எல்லாம் கொஞ்சங்கொஞ்சமாக எல்லாக்கிராமங்களிலும் பரப்பி, அவை பிரிந்திருக்கும் நிலைமையை மாற்றி நாட்டின் ஏனைய பாகங்களோடு கிராமங்களை இணைத்து வருகிறது. இங்ஙனம் நாட்டின் பல்வேறு பாகங்களுக்கும் கிராமத்திற்கும் ஒருவிதமான பற்றும் சம்பந்தமும் ஏற்படுவதின் மூலம் கிராமவாசி பலவிதமான நன்மைகளை அடைய சந்தர்ப்பமிருக்கிறது. அவற்றினால் லாப நஷ்டம் இரண்டும் ஏற்படும் என்பதை மறுக்க முடியாது. கிராமவாசிகளுக்கு உதவி செய்ய முன் வருபவர்களெல்லாம் அவர்களுக்கு இம்மாதிரியான நஷ்டங்கள் ஏற்படக்கூடிய நிலைமைகளைத் தடுத்து லாபம் ஏற்படக்கூடிய வழிகளை எடுத்துப் புகட்டி அவர்களின் நிலைமையை மேம்படுத்தவேண்டும். அவர்கள் சுதந்தரமாக வாழ எவ்வெவ்விதமான வழிகளைக் கைப்பற்றினால் அனுகூலமுண்டோ அவ்வழிகளையெல்லாம் எடுத்துப்போதிக்க வேண்டும். இத்துறையில் படிப்பு விஷயமாயும், பொருளாதார விஷயமாயும், உழைக்க எவ்வளவு பேர் முன் வரினும் அவர்கள் எல்லாரும் முரண்படாமல் உழைக்க இடமுண்டு.

## விவசாயிகளின் லக்ஷ்யம்

பொதுவாக விவசாயிகளின் பொருளாதார நிலைமையை மாத்திரம் மேம்படுத்துவது அவர்களுக்கு எந்நாளும் ஒரு நிரந்தரமான நன்மையை அளிக்காது. நல்ல விதைகளாலும், நூதன விவசாயக்கருவிகளாலும், நவீன முறைகளாலும், அதிகமான மாகுலை அடைவதும், நீர்ப்பாசன வசதிகளால் பயிர்களுக்குப் போதுமான பாதுகாப்பும், நோய் முதலியவைகளால் ஏற்படும் நஷ்டங்களை ஈடுகட்டப்போதுமான ஏற்பாடும், போக்குவரத்து சௌகரியங்களால் பண்டங்களை விலையாக்க ஏற்படும் வசதிகளால் உண்டாகும் அதிக வருமானமும், ஜனங்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்தற்குரியனவாகும். ஆனால் ஒரு குடியானவன் பொருளாதார நிலைமை எவ்வளவுக் கதிகரிக்கிறதோ அந்த அளவுக்கு ஜனத்தொகையும் அதிகரித்து வந்தால் குடியானவனின் வாழ்க்கையில் நாம் நிரந்தரமான மேம்பாட்டை எதிர்பார்க்கவொண்ணாது. 1901-ம் வருஷத்தில் இந்தியப்பஞ்சக்கமிஷன் இந்த விஷயத்தை ஆலோசித்ததை நாம் கவனிக்கவேண்டியது அவசியம். ஜனங்கள் எவ்வளவுக்கெவ்வளவு புத்திசாலித் தனமாகவும் வகையறிந்து சிக்கனமாகவும் வாழ்வு நடத்துகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் வறுமை நீங்கும் என்று அவர்கள் முடிவு கட்டியிருக்கிறார்கள். இந்தியாவில் பிறந்த ஒவ்வொருவனும் தேசத்தின் நன்மையையும், தன்னுடைய நன்மையையும் உத்தேசிக்குமிடத்து தன் சாமர்த்தியம், ஊதியசக்தி, வேலைத்திறமை இவைகளை அதிகரித்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். கிராமச்சங்கங்களுக்கு சுகமும், நன்னலமும், விவசாயப் பயிற்சி போன்ற தொழில்



முறைகளினாலேயே மாத்திரம் வராது என்பதை முழுநம்பிக்கையுடன் சொல்லலாம். குடியானவர்கள் நலமான வாழ்க்கையையும், புதிய விவசாய முறைகளையும், கைப்பற்றினால்தான் ஏற்படும் என்பது உண்மையானாலும் குடியானவர்களுக்கு நல்வாழ்வு வாழவேணுமென்ற ஒரு தீவிர ஆசை இருந்தால்தான் இது ஏற்படும் என்பது திண்ணம். ஆகவே, குடியானவர்களின் நிலைமையை மேம்படுத்த வேணுமென்றால் அவர்களுக்கு இன்னும் நலமான ஒரு வாழ்க்கை நிலைமை இருக்கிறதென்பதையும் அவ்விதமான வாழ்க்கை வாழவேணுமென்ற ஒரு அவாவையும் குடியானவர்களுக்கு ஊட்ட வேண்டும். தற்காலத்தில் குடியானவர்களுக்கு இதைப்பற்றி உருவமற்ற ஒரு எண்ணமும், ஆசையும் இருந்து வருகிறது. ஆனால் அவை நன்றாக உருவெடுத்து வளருவதற்குத் தடையாயிருப்பவைகளை நாம் விளக்கினாலொழிய பெரும் பாலான முன்னேற்றத்தை நாம் எதிர் பார்க்க முடியாது. இப்போது நாம் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம் ஜனங்களின் மனோபாவத்தைப் பொருத்ததே யொழிய தொழில்களைப் பொருத்ததல்ல. மேம்பாடான வாழ்க்கை வாழவேண்டுமென்ற ஒருபிடிவாதமான எண்ணம் ஜனங்களுக்கு ஏற்படவேண்டும். அந்த மனோபலத்தை உண்டாக்காமல் விவசாய முறையாலும், மற்றும் வியாபார வசதிகளாலும் ஏற்படும் மேம்பாடெல்லாம் வீண்பாடேயாகும். தற்காலத்தில் கிராமங்களிலே இப்புத்துணர்ச்சி, அதாவது நாகரீக வாழ்வு வாழவேண்டுமென்ற ஒரு சக்தியே ஜனங்களிடத்தில் காணப்படாமலிருக்கிறது. நாம் அச்சக்தியை உண்டாக்க வேண்டும். மேம்பட்ட வாழ்க்கைக்கு தடங்கலாய் இருக்கும் அம்சங்கள் தற்காலத்தில் சில இடங்களில் மாறி வருகின்றது. மற்றும் சில இடங்களில் அறவே ஒழிந்துபோயிற்று. ஆகவே, தற்போது ஜனங்களிடத்துப் பரவிவரும் இப்புத்துணர்ச்சியை நாம் பலப்படுத்திப் புதிய முறைகளைக்கொண்டு, அதாவது எல்லாருக்கும் கல்வி கற்று வளர்க்கவேண்டும்.

## கிராமத்தாருக்கு வழிகாட்டல்

கிராம விஷயங்களைப் பொருத்தமட்டில் அவர்களுக்குப் பொதுஜன ஊழியர்கள் செய்யும் தர்ம கைங்கர்யங்களையும், இலவச உதவியையும் விட, கிராம ஜனங்களுக்கு கிராம விஷயங்களை எப்படி நடத்துவது, என்பதைப்பற்றி நன்றாக எடுத்துரைப்பது மிகவும் அவசியம் என்று தோன்றுகிறது. எவ்வளவுக் கெவ்வளவு கூடுமோ அவ்வளவுக் கவ்வளவு நாம் கிராமத்தாரின் தேவைகளை அதிகரித்துக்கொள்ளச் சொல்லி அவற்றை அவர்கள் எப்படித் தம் சுயமுயற்சியாலேயே அடையக்கூடும் என்பதையும் எடுத்துக்காட்ட வேண்டும். குடியானவர்களின் நிலமோ குறைந்த விஸ்தீரணமுள்ளது. ஆதலால் அவர்கள் பிறர் உதவியை எதிர்பார்க்காமல் சாகுபடி செய்து பிழைக்கமுடியும்; ஏனையோர் குடியானவர்களின் உதவியை நாடியே பிழைக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். தன் ஜீவனத்திற்கு வேண்டிய ஊதியத்தைப் பெற்ற பிறகு தன் சுகத்திற்கு வேண்டியவைகளை அடைய அவன் பிரயத்தனப்பட வேண்டும். கிராமத்தார் ஒருவரோடொருவர் ஒத்துழைக்க அவர்களுக்கு வேண்டிய அளவு ஓய்வு நேரம் இருக்கிறது. குடியானவனுக்கு வேறு செலவுக்குப் பணம் வேணுமென்றால் முதல்தரமான விவசாய முறைகளைப்பற்றி ஆழ உழுது அகல விதை விதைத்து பணம் சம்பாதிக்கவேண்டும். அன்றேல் ஓய்வு நேரத்தில் ஒரு சிறிய கைத்தொழிலை அவன் கைப்பற்றி அத்தொழிலைச் செய்து பணம் சம்பாதிக்கவேண்டும்.

இனிமேல் கிராமத்தாரின் நலத்திற்கு உழைப்போர்களெல்லாம் கிராம ஜனங்கள் தங்கள் ஓய்வு நேரங்களில் எவ்விதமான உற்சாக வேலையை செய்யக்கூடும் என்பதைக் கவனிக்க வேண்டும். அதிருஷ்ட வசமாக முற்காலத்தில் கிராமப் பொது நலத்திற்காக கிராமத்தாரெல்லாரும் சேர்ந்து சில வேலைகளைச் செய்து வந்தார்கள். குளங்களை வெட்டி சுத்தஞ்செய்வதும், கிணறுகள் வெட்டுவதும் இவை போன்ற வேலைகளை எல்லாம் கிராமத்தாரெல்லாரும் ஒன்று சேர்ந்தே செய்து வந்தார்கள். இப்பண்டைகால நற்பழக்கம் தற்போது வழக்கம் தப்பி இருந்தாலும், அதை மறுபடியும் வழக்கத்திற்குக் கொண்டு வந்து, கிராமவாசிகளுக்கும் கிராமத்தாருக்கும் ஏற்படக்கூடிய நன்மைகளை எடுத்துரைத்து, குடிக்க நல்ல தண்ணீர் வசதிக்குக் கிணறுகள் வெட்டவும் குப்பைகளை அப்புறப்படுத்தவும், வீதி

களைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளவும், அவர்களைத் தூண்ட வேண்டும். அவர்களுக்கு இவ்விஷயங்களில் ஒரு ஆர்வத்தையும், சிரத்தையையும் உண்டாக்க வேண்டும்.

இம்மாதிரியான ஒத்துழைப்பை நாம் மறுபடியும் ஜனங்களிடத்து உண்டாக்கத் தவறினால் நாம் கிராம நிலைமை முழுதும் மாற்ற முடியும் என்ற நம்பிக்கையை உடனே விட்டுவிடலாம். கிராமப் பொது நலத்திற்கு அவசியமான மேற்கூறப்பட்ட தொழில்களைக் கூலி கொடுத்துச் செய்விக்க குடியானவர்களும் கிராமத்தார்களும் சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள். அரசாங்கத்தாராவது, லோகல்போர்டாராவது, அந்த வேலைகளுக்கு வேண்டிய உதவியையும், பணத்தையும் அளித்து ஆதரவளிப்பதில்லை. சில மாகாணங்களில் கிராமமே நிரம்ப நெருங்கியதாயிருக்கிறது. கிராமத்தைச் சுற்றி இருக்கும் வயல்களெல்லாம் பணக்காரரைச் சேர்ந்திருப்பதால் அவர்கள் ஏழை ஜனங்களுக்கு வீடு கட்டிக்கொள்ள இடம் கொடுப்பது கஷ்டமாயிருக்கிறது. இதனால் கிராமம் வளர வசதியற்றுப்போகிறது. மேலும், பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் விளையாடுவதற்குப் போதுமான விஸ்தாரமான மைதானங்களும் விளையாட்டு நிலங்களும் கிடையாது. இவைகளை எல்லாம் கவனித்துக்கொண்டு கிராமத்தில் கிராமத்தாரின் உபயோகத்திற்கென்று போதுமான நிலத்தை ஒதுக்கி வைத்து குழந்தைகளுக்கு விளையாடுவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து வைக்க வேண்டியது அவசியம். ஏனென்றால் விவசாயியானவன் பிறருதவியின்றி இப்பழக்கத்தைக் கைப்பிடித்து தன் கிராமத்திற்கும் தனக்கும் பயன்படக்கூடிய வழியில் உழைப்பான் என்பது சாதாரணமாய் நம்பத்தகுந்ததல்ல. அவனுக்குத் தலைமை வகிக்க சக்தி இல்லை. அப்படித் தப்பித்தவறி வாசிப்பவர்கள் கிராமச்சமூக வாழ்வில் ஈடுபட்டு ஊழியஞ்செய்ய முன் வருவதில்லை. இந்நிலைமையில் நாம் யாரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கலாம் என்ற கேள்வி உண்டாகலாம். கிராம உபாத்தியாயரைத் தலைவராகச் செய்யலாம் என்று சில பேர் சொல்லலாம். உபாத்தியாயர்கள் ஜனங்களுக்குக் கல்வி கற்பிப்பதுபோல் ராஜாங்க தத்துவத்தையும் கிராமங்களின் தேவைகளையும் நன்கறிந்து படித்து அனுபோகமுள்ளவர்களாயிருந்தால் அவ்வுபாத்தியாயர்கள் கிராமத்தில் தலைமை வகிக்கலாமென்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. ஆனால் படிப்பு விஷயம் அதிகப்பொறுப்புடையது. ஆகையால் உபாத்தியாயருக்கு அதிகமான வேலையையுங் கொடுக்கக்கூடாது. அப்படிக் கொடுப்பதெல்லாம் அவரது பள்ளிக்கூடத்து வேலைக்குப் பாதகமாய் இருக்குமேயொழிய சாதகமாய் இருக்காது. ஆனால் கிராமத்தாருக்கு சமயோஜித சிகிச்சை செய்ய இவர்களைப் பயிற்றுவித்து உதவி செய்யும் ஏற்பாட்டை நாங்கள் ஏற்கனவே ஆமோதித்திருக்கிறோம். உபாத்தியாயர் தான் பையன்களுக்குப் பாடம் போதிப்பதோடு இதையும் செய்து மாணவர்களது பொது நலத்திற்கு ஒத்துழைக்கும் உணர்ச்சியைப் புகட்டுவாரேயானால் அவர் தன்னுடைய கடமை முழுதும் செய்யப்பட்டவராகக் கருதப்படுவார் என்றே சொல்லலாம். இதில் சாமர்த்தியமுள்ளவர்கள் சிலர் இன்னும் வேலை செய்ய ஆவலுள்ளவர்களாக இருந்தால் அவர்கள் கிராமப் பெரியார்களுக்குப் பிரயோஜனப்படும்படியாக புஸ்தகசாலையை ஏற்படுத்தி, அவர்கள் வாசித்ததை மறக்காமலிருக்கும்படிக்குச் செய்யலாம். மேலும், ஒவ்வொரு கிராமத்திலும், ஒரு கிராமத் தலைவன் அல்லது மணியக்காரன் இருக்கிறான். அவனுடன் கூட அநேகம் ரிவின்யூ உத்தியோகஸ்தர்களும், கணக்கப்பிள்ளைகளும் இருக்கின்றனர். சிலசமயங்களில் இவர்கள் வேலையில் அமர்வதற்கு முன்பு தக்க பயிற்சியும் கொடுக்கப்படுகிறது. இந்தப் பயிற்சியுடன் கிராமப் புனருத்தாரணத்திற்கு வேண்டிய கல்வியும் இவ்வாயிரக்கணக்கான உத்தியோகஸ்தர்களுக்குப் போதிக்கப் படுமாகில் இத்துறையில் நாம் நல்ல காரியத்தைச் செய்தவர்கள் என்று எண்ணிக்கொள்ளவும், அதனால் கிராமத்தாருக்கு நல்ல பலன் ஏற்படுமென்பதில் நமக்குக் கொஞ்சம் நம்பிக்கை ஏற்படவும் மார்க்கமுண்டு.

பஞ்சாப் மாகாணத்திலே, கர்க்கோன் ஜில்லாவிலே டிப்டி கமிஷனரான எப். எல். பிரேயன் வகுத்துள்ள "கிராம வழி காட்டி" என்ற ஏற்பாடுதான் ஏற்றது என்பது எங்கள் அபிப்ராயம். விவசாயிகளின் மக்களுக்கு பரஸ்பர சகாயத்திற்



காகச் செய்யும் கூட்டுத்தொழிலின் மகிமையைப் பற்றி ஒரு உணர்ச்சியையும், கிராமச் சுகாதாரத் தத்துவம், ஆரம்ப வைத்தியம், கூட்டுறவு, விவசாய அபிவிருத்தி. குடிசைத் தொழில்களைப் பற்றிய விஷயங்களில் நல்ல அறிவும் ஏற்படும்படியான ஒரு தனிப்பயிற்சித் திட்டத்தை ஏற்படுத்திப் பயிற்றுவித்தல் வேண்டும். அவ்விதம் பயிற்சி பெற்றோர் திரும்பவும் தம் கிராமத்திற்குச் சென்று அங்கும் ஏனைய கிராமங்களிலுமுள்ள ஜனங்களுக்கு ஒரு வழி காட்டியாகவும், ஆப்த நண்பராகவுமிருந்து அவர்களுக்கு வேண்டிய உதவி செய்யக்கூடும். தொழிற்கல்வி சம்பந்தமான விஷயங்களில் கிராமத்தாருக்கு உதவி வேண்டி இருந்தால் அவர்கள் அவ்விதமான உதவியை யாரிடமிருந்து பெறலாமென யோசனை சொல்லலாம். விவசாயம், கால்நடை, வைத்தியம், சுகாதாரம், முதலிய பலவற்றில் தற்காலத்தில் பல ஜில்லாக்களிலும் அவ்விஷயங்களில் தேர்ச்சிபெற்ற உத்தியோகஸ்தர்களின் உதவி ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் இவர்களிடமிருந்து எப்படி வேண்டிய சகாயத்தைப் பெறுவது என்பதைச் சொல்ல, கிராமத்தில் இவ்விஷயங்கள் அறிந்த ஒருவர் இருக்கவேண்டியது மிகவும் அவசியம். ஏற்கனவே இருக்கும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கைக்கு இன்னும் சில புதிய உத்தியோகஸ்தர்களைச் சேர்க்கவேண்டுமென்று நாங்கள் சிபார்சு செய்கிறோம். அதாவது, நீர் பாசன வசதிகளுக்காகவும், சிறிய அணைகளைக் கட்டி நீர் தேக்கம் செய்வதற்காகவும், நீர் தேக்க வசதிகளுக்காகவும், மேச்சல் தரைகளையும், விறகுக்கான காடுகளையும் காப்பதற்காகவும் சில உத்தியோகஸ்தர்களை ஏற்படுத்தவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறோம். கிராம வழிகாட்டிகள், இத்துறையில் கிராமத்தார்களுக்கு உற்ற துணைவர்களாக இருப்பார்களென்று நாங்கள் நம்புவாதல் கிராமப்புனருத்தாரண விஷயத்தில், சிரத்தையுள்ள ஒவ்வொருவரும் இதைப்பற்றி நன்காலோசனை செய்யவேண்டுமென்பது எங்களது கோரிக்கை.

## நகரமும் கிராமமும்

கிராமத்தாருக்கு உதவி செய்யும் பொறுப்பை வகிக்கும்படிக்கும், தங்களது ஓய்வு நேரங்களில் கிராமப் பொது வாழ்க்கையின் சுகத்திற் கேற்ற விளையாட்டு, டிராமா, முதலியவற்றை ஏற்படுத்தும்படிக்கும், கிராமத்திலிருக்கும் ஒருவருக்கு அப்பொறுப்பைக் கொடுத்து நகரவாழ்க்கைக்கும் கிராம வாழ்க்கைக்கும் நெருங்கிய சம்பந்தத்தை ஸ்தாபிக்கவேண்டும். மாறுதலடைந்து வரும் இக்காலத்து நம் நாட்டில் குடியானவர்கள் படித்தவர்களிடமிருந்து உதவி பெறாமல் போனால் அதைவிட வேறு துர் பாக்கியம் கிடையாது. இந்திய ஊழியர் சங்கமும், பூனா சேவசதனமும், செய்து வரும் வேலையைக் கவனிக்குமிடத்து அவை வருங்காலத்தில் ஜனங்களுக்கு ஏராளமான நன்மையை உண்டு பண்ணுமென்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. ஆனால், பெரும்பாலும் தற்காலத்தில் சமூக ஊழியர்கள் தங்கள் கவனத்தை முழுதும் பட்டணங்களிலும், அதை ஒட்டிய பிராந்தியங்களிலுமே செலுத்துகிறார்களே தவிர கிராமங்களுக்குச் சென்று ஒன்றும் செய்வதில்லை. தனிமையாக ஒருவர் செய்யும் வேலையைவிட சங்கங்கள் செய்யும் வேலையே மிகவும் மேலானதென்பது எங்களது அபிப்ராயம். இன்னும் சிலகாலம் வரை அரசாங்கத்தார் இவ்விஷயத்தில் வேண்டிய சிரத்தை எடுத்துக் கொண்டு அவற்றை ஆதரித்து வரவேண்டியது அவசியம். 5,00,000 கிராமங்களுக்கு இப்புது உணர்ச்சியை உண்டாக்கி புத்துயிர் அளிப்பதென்றால் எளிதான காரியமல்ல. இவையெல்லாம் பிரத்தியேகமான சங்கங்களை ஏற்படுத்தி அவற்றைப் பலப்படுத்தி சர்க்காரின் ஆதரவால் நடத்தினால் மாத்திரமே சரிவர நடக்கும்.

## சர்வகலாசாலைகள்

சர்வ கலாசாலைகள் கிராம அபிவிருத்தியில் ஊக்கங்கொண்டு கிராமங்களுக்கு விசேஷமான நன்மையைச் செய்யும் பொறுப்பை பெற்றிருக்கிறது என்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். சர்வகலாசாலைகளில் படிக்கும் மாணவர்களில் பெரும்பாலோர் கிராமங்களிலிருந்து வந்தவர்களாவர். அவர்களுக்குக் கிராமச்சமூக சேவையில் ஒரு தாகத்தை உண்டு பண்ணவேண்டியது சர்வகலாசாலைகளின் கடமையாகும். இரண்டு வழிகளில் சர்வகலாசாலைகள் உதவி புரியலாம். முதன் முதலில், பொருளாதார விஷயமான புள்ளிகளை சேகரித்தல், இரண்டாவதாக கிராம

ஜனங்களை இவ்விஷயங்களில் முன்னின்று உழைக்கும்படி தூண்டுதல். இவ்விரண்டு காரியங்களையும் அவர்கள் செய்யக்கூடும். சர்வகலா சாலைகள் தாமே இத்தொழிலை மேற்கொண்டு கிராமங்களில் சமூகப் பொருளாதார புள்ளிகளை சேர்க்கலாம்.

பஞ்சாப் மாகாணத்தில் ஏற்பாடான கிராமச் சமூக இயக்கமானது எங்களது கவனத்தை இழுக்கிறது. மத்திய கிராமச் சமூக சங்கமென ஒரு மாகாணச் சங்கமிருக்கிறது. அதில் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அதிகமாய் இருக்கிறார்கள். அச்சங்கமானது ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள கிராமச் சங்கத்திற்கு இணைக்கப்பட்டிருக்கிறது. கிராமச் சங்கத்தில் உள்ளவர்களெல்லாம் சாதாரண ஜனங்கள், உத்தியோகஸ்தர்கள் அல்ல. ஒவ்வொரு ஜில்லா சங்கத்தின் கூட்டத்திற்கும் பல இலாக்காக்களின் பிரதிநிதிகள் வந்திருந்து விவசாயம், கல்வி, சுகாதாரம் கூட்டுறவு போன்ற விஷயங்களில் கிராமத்தாருக்கு வேண்டிய உதவியைச் செய்து வருகிறார்கள். மாகாணக்கிராமச் சங்கத்திற்கு சர்க்கார் பணஉதவி செய்கிறார்கள். அப்பணத்தை மாகாணச்சங்கம் ஜில்லா சங்கங்களுக்குப் பிரித்துக்கொடுக்கிறது. கிராம அபிவிருத்தி சம்பந்தமான துண்டுப்பிரசுரங்களையும் அச்சடித்து உதவுகிறது. கண்ணுடிப்படங்கள் மூலமாகவும், சினிமா படங்கள் மூலமாகவும் ஜனங்களுக்கு கிராம அபிவிருத்திக்கான விஷயங்களும் போதிக்கப்படுகிறது. சமீபத்தில் கூட்டுறவைப்பற்றி தயாரிப்பதற்கான செலவை அச்சங்கம் ஏற்றுக்கொண்டது. கர்க்கோன் ஜில்லாவிலுள்ள சங்கமானது கிராமத்தில் டிராமாக்கள் நடிப்பதற்கென்று பணஉதவி செய்தது. அந்த ஜில்லா சங்கத்தின் காரியதரிசி ஜில்லாப் பள்ளிக்கூட இன்ஸ்பெக்டராக இருக்கிறார். மாகாணச் சங்கமாவது ஜில்லா சங்கமாவது நிர்வாகத்தில் தலையிடுவதில்லை. கிராம விஷயங்களில் ஆலோசனை செய்வதே இக்கமிட்டிகளின் தொழில்.

மேற்கூறிய முறைகளை எவ்வளவு தூரம் நாம் அன்னிய மாகாணங்களில் அமுலுக்குக்கொண்டு வர முடியுமென்பது கவனிக்க வேண்டியதாய் இருக்கிறது. இம்முறையைக் கைப்பற்றினால் பொதுப்பணம் அதிகமாய்ச் செலவு செய்ய வேண்டி இருக்கிறது. சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் இதற்காக அதிக நேரம் செலவு செய்ய வேண்டி இருக்கிறது. நாட்கள் செல்லச் செல்ல இச்சங்கங்கள் செய்த வேலையும் பணச் செலவும் பிரயோஜனமுடையனவா? இல்லையா? என்பது தெரியவரும்.

இவ்வியக்கங்களில் பெண்களையும் சேர்த்துக் கொண்டு கிராமப் பெண்களின் நிலைமையையும் சீர்படுத்திக் கொண்டால் வெகு சீக்கிரம் கிராமங்கள் முன்னேற்றமடையுமென்பதில் சந்தேகமில்லை. ஒவ்வொரு கிராமத்திலும் பெண்களுக்கென்று ஒரு சங்கத்தை ஏற்படுத்தி கல்வி, கூட்டுறவு, சிசு சம்ரக்ஷணை போன்ற விஷயங்களைக் கற்றுக்கொடுத்தல் அவசியம். பஞ்சாபிலிருக்கும் கிராமச் சீர்திருத்தத் திட்டத்திற் கொப்பான மற்றொரு திட்டம் நம் நாட்டில் வேறு எந்த மாகாணத்திலும் நாங்கள் காணவில்லையாதலால் மற்றைய மாகாணங்கள் மேற்கூறிய திட்டங்களைக் கைப்பிடித்து நடந்தால் கிராமங்களுக்கு நன்மையுண்டாகும்.

கிராமங்களின் வறுமைநிலையை அகற்றவும், கிராம வளர்ச்சிக்கு அனுகூலமானவற்றை போற்றவும், வேண்டியபோது அவற்றிற்கே பிரத்தியேகமான சங்கங்களை ஸ்தாபித்துத் தக்க முறையில் உழைக்க வேண்டும். எங்கெங்கே ஜனங்களிடத்தில் பழயனவற்றை விட்டு புதிய முறைகளைக் கொண்டு வாழ வேண்டுமென்ற எண்ணம் ஏற்படுகிறதோ ஆங்காங்கு உடனுக்குடனே ஒரு சங்கத்தை ஏற்படுத்தி அவ்வெண்ணத்தை நாம் பலப்படுத்த வேண்டும். கலியாணச் செலவுகளையும், மற்றும் அனாவசியமான செலவுகளையும் குறைக்கவும், குடியை நிறுத்தவும், சங்கங்களின் மூலமாகவும், அவற்றின் நிபந்தனைகள் மூலமாகவும், குறைக்க வேண்டிய முயற்சிகளைச் செய்யலாம். ஒவ்வொரு ஜாதியிலும் உள்ள ஸ்திரீகள் எல்லோரையும் இம்மாதிரிச் சங்கத்தில் சேர்த்துக்கொண்டு அவர்கள் மூலமாய் வீண் செலவுகளை எல்லாம் நிறுத்தலாம். இதனால் பெண்களிடத்தில் காணும் நகைப் பைத்தியத்தையும், படாடோபத்தையும் நாம் குறைக்கமுடியும்.



## விவகாரங்களும் பஞ்சாயத்தும்

கிராம வாசிகள் கடனில் மூழ்கி இருப்பதற்கு ஒரு முக்ய காரணம் அவர்கள் கோர்ட்டில் நடக்கும் விவகாரங்களுக்காகக் கடன் வாங்குவதாகும். இந்தியாவில் பெரும்பான்மையான விவகாரங்களெல்லாம் மிகவும் அற்பமானவை. அவைகளில் சாதாரணமாய் எதிர்வாதமும் அதிகமாய் கிடையாது. இதனால் அவர்களுக்கு ஏற்படும் பணச் செலவும் சரீரப் பிரயாசையும், துன்பங்களும், கணக்கிலடங்காதவை. இதைக் குறைக்க கிராமங்களில் பஞ்சாயத்தும் மற்றும் வேறு முறைகளும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இது விஷயமாய் 1925-ம் வருஷத்தில் ஏற்பட்ட சிவில் ஜஸ்டிஸ் கமிட்டியார் ஒவ்வொரு மாகாணத்திலும் பஞ்சாயத்துக்களை ஏற்படுத்தி முன்சீப் கோர்ட்டின் அதிகாரத்திலிருந்து இச்சிறிய வழக்குகளை விலக்கி கிராமப் பஞ்சாயத்திலேயே விசாரிக்கச்செய்ய வேணுமென்று சிபார்சு செய்திருக்கிறார்கள்.

கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டு ஜனங்கள் இருக்குமிடத்திலேயே இருப்பதால் கக்ஷிக்காரர்களுக்குக் கஷ்டமில்லை. விவகாரத்திற்காகக் கோர்ட்டில் ஏற்படும் செலவும் மிகவும் சொற்பமாகும். பஞ்சாயத்துக் கோர்ட்டுகளில் வக்கீல்களுமில்லை. பீஸ் கொடுக்கவேண்டிய அவசியமுமில்லை.

பஞ்சாப் கூட்டுறவு ரிஜிஸ்திரார் அம்மாகாணத்தில் விவகாரம் ஒரு பெருந் தொல்லையாக இருப்பதை அறிந்து கோர்ட்டுக்குப் போகாமல் மத்தியஸ்தர் மூலமாகவே ஜனங்கள் தங்களது விவகாரங்களைத் தீர்த்துக் கொள்வதற்கென்று மத்தியஸ்தர் சங்கங்களை ஆங்காங்கு ஸ்தாபித்தார். அவை எல்லாம் நன்றாகச் சிலகாலம் நடந்து வந்தன. இச்சங்கங்கள் விசாரித்த விவகாரங்களில் கால் நடைகள் தோட்டத்தில் புகுந்து பயிரை அழித்ததும், எல்லைக்கல் விவகாரங்கள் போன்ற சிறு விஷயங்களே அதிகமாகும். அநேகமாக இச்சிறு வழக்குகள் தான் பலமான சிவில் கிரிமினல் வழக்குகளுக்கு அடிப்படையாக இருக்கின்றன. கடன் கொடுப்பவனும் வியாபாரியும்கூட தங்களுக்கு வரவேண்டிய பணத்திற்கு கோர்ட்டில் தாவா செய்து தீர்ப்புப் பெற்று அதை நிறைவேற்றி பணத்தை வசூலிப்பதைவிட கிராமத்திலேயே செலவில்லாமல் சரசமாக மத்தியஸ்தர், பஞ்சாயத்து மூலமாகத் தங்களது விவகாரங்களைத் தீர்த்துக்கொள்ளுகிறார்கள். பஞ்சாயத்தார் முன்வரும் வழக்குகளெல்லாம் வெகு சீக்கிரத்தில் தீர்க்கப்பட்டு வந்தன.

இம்மத்தியஸ்தர் சபை எல்லாம் சில வருஷங்களுக்கு முன்புதான் நிறுத்தப்பட்டு இப்போது வேறு விதமான திட்டத்துடன் புதிய பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இம்மத்தியஸ்தர் சபையானது பஞ்சாயத்தில் விசாரிக்க முடியாத பண சம்பந்தமான விவகாரங்களையும் விசாரித்து நியாயம் வழங்கி இருக்கிறது.

## தாழ்த்தப்பட்ட வகுப்பினர்

தாழ்த்தப்பட்டவர்களின் நிலைமையைப்பற்றி விரிவாக விசாரிக்க எங்களுக்கு அதிகாரமில்லை. ஆனால் அவர்களின் எண்ணிக்கையைக் கவனிக்குமிடத்து அவர்களும் இந்திய நாட்டின் பொது வாழ்வில் ஒரு முக்யஸ்தானத்தை பெற்றிருக்கிறார்களாதலால் அவர்களுடைய குறைகளைப் பற்றி நாம் இங்கு சிறிதாவது கூறாமலிருத்தல் நியாயமில்லை.

1921 ம் வருஷத்திய ஜன சங்கியைத் தணிக்கைப்படி 52,680,000 தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இவர்கள் படும் கஷ்டமும் துயரமும் தீண்டாமையினாலேயேயாகும். இவர்களுக்கு ஏனைய ஜனங்களைப்போல் ஜனங்களுடன் சகஜமாய் கலக்க இஷ்டமில்லை. கிராமக் கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுக்க முடியாது. அவர்கள் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம் கிடையாது. ஆனால் இதற்காக நாம் தற்காலத்திய ஹிந்துக்களைக் குறைகூற முடியாது. இந்தக் குறை அனாதிகாலமாய் இருந்து வருகிறது. ஹிந்து சமூகத்தைச் சேர்ந்த அநேகர் இக்குறையைத் தீர்ப்பதற்காக தங்களாலியன்ற அளவு உழைத்து வருகின்றனர். தாழ்த்தப்பட்டவர்களில் சிலர் கல்வி பயின்று மேலான பதவி அடைந்து சுகமாக வாழ்கிறார்கள். ஆகவே,

148728

படிப்புதான் இக்கஷ்டங்களை எல்லாம் போக்கடிக்க ஒரு ஏற்ற மருந்து என்பது எங்கள் அபிப்ராயம்.

## சமூக ஊழியர்களின் கஷ்டம்

தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சாதாரணமாய் தமது குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவதில் அதிக சிரத்தை காட்டி வருவதில்லை. அவர்கள் தாங்கள் கூலி வேலை செய்து சம்பாதிப்பதுடன் தங்கள் குழந்தைகளும் சம்பாதிக்க வேண்டுமென்று அபிப்ராயப்படுகிறார்கள். அப்படி இருந்தாலும் நாடு முழுதும் இப்போது படிப்பு அதிகரித்துள்ளது. எதிர்காலத்தில் கூடுமான வரையில் தாழ்த்தப்பட்ட ஜாதிப்பிள்ளைகள் ஏனைய ஜாதிப்பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடத்திலேயே சேர்த்துப் படிக்க வேண்டுமேயொழிய தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கென்று பிரத்தியேகமான பள்ளிக்கூடத்தை ஏற்படுத்துவது அவ்வளவு விரும்பத்தக்கதல்ல.

இம்முக்கியமான விஷயத்தைப்பற்றிய எங்களது சிறிய ஆலோசனையை முடிப்பதன் முன் நாங்கள் ஒன்று சொல்ல விரும்புகிறோம். மேற்கூறியவாறு, கிராமப்புனருத்தாரணத்திற்காகச் செய்யப்படும் வேலை எல்லாம் ஜனங்களிடத்து மனவிரிவையும், விஷயங்களைத்தாமே நன்கறிந்து கொண்டு கிராமத்தின் நன்மைக்காக உழைக்கவேண்டுமென்ற உணர்ச்சியையும் முக்கியமாக உண்டாக்கவேண்டும். கிராமத்தார்கள் இவ்விஷயங்களில் தங்களுக்கு அன்னியர்கள் வந்து தர்மத்திற்காக உழைப்பார்கள் என்ற மனப்பான்மையை கிராம ஜனங்களிடத்து எவ்விதத்திலும் உண்டாக்கக்கூடாது. கிராம ஜனங்களுக்கு ஏற்ற அறிவையும் உணர்ச்சியையும், தளரா முயற்சியையும் குறைபடா உற்சாகத்தையும் புகட்டி விட்டால் கிராமங்கள் தாமாகவே பிறர் உதவியின்றி வெகு சீக்கிரத்தில் புத்துயிர் பெற்று ஜனங்களுக்கு வாழ்க்கையில் ஒரு களிப்பையும் ஊக்கத்தையும், உண்டாக்குமென்பது எங்கள் துணிபு.

## காரியதரிசி சுற்றுப்பிரயாணம்

யௌவன கூட்டுறவாளர் சங்கக் காரியதரிசி தோழர் என். எஸ். கோவிந்தசாமி அவர்கள் மார்ச்சு-மீ 5-உ முதல் ஏப்ரல் மீ 10-உ வரை கரூர், சேலம், வேலூர், கஞ்சீவரம், சென்னை, கடலூர், சிதம்பரம், மாயவரம் முதலிய நகரங்களுக்கு விஜயம் செய்து ஆங்காங்குள்ள பிரபல கூட்டுறவாளர்களையும், டிப்டி ரிஜிஸ்திரார்களையும் கண்டு பேசி நமது பத்திரிகையின் அபிவிருத்திக்கான ஏற்பாடுகள் செய்துள்ளார். தோழர். என். எஸ். கோவிந்தசாமி அவர்களுக்கு ஆதரவு நல்கிய கரூர் திரு. வடமலைக் கோனார், திரு. ராமலிங்கம், சேலம் டிப்டி ரிஜிஸ்திரார் திரு. ஜெ. வி. ராயன், வேலூர் மத்திய பாங்கு காரியதரிசி திரு. வி. முருகேச முதலியார், பெடரேஷன் ஆபீசர் திரு. நாராயண பிள்ளை, கஞ்சீபுரம் பெடரேஷன் ஆபீசர் திரு. சுந்தரம், சென்னை மாஜி கூட்டுறவு டிப்டி ரிஜிஸ்திரார் திரு. வி. டி. நாயகம், சென்னை ஜில்லா பாங்கு டைரக்டர் திரு வி. மாணிக்க முதலியார், சென்னை தொழிலாளர் கூட்டுறவு பாங்கு காரியதரிசி திரு. டி. எம். பாரதசாரதி, தோழர், வி. பாசுதேவ் பி. ஏ. பி. எல். எம். எல். ஸி, கடலூர் டிப்டி ரிஜிஸ்திரார் திரு. பால சுந்தர முதலியார், மாயவரம் திரு. டி. சேவியர் ஆகியோருக்கு நமது வந்தனம் உரிய தாகுக.

(ப—ர்.)



# கூட்டுறவாளர் மகாநாடு

## திரு. ராமதாஸ் உபதேசம்

விசாகப்பட்டினம் ஜில்லா ஐந்தாவது கூட்டுறவாளர் மகாநாடு ஏப்ரல்-மீ 21-உ திரு. ராமதாஸ் பந்துலு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுகாலை அவர் நிகழ்த்திய அறிய சொற்பொழிவின் சாராம்சமாவது:—

கூட்டுறவு இயக்கத்திற்குப் புத்துயிர் அளிக்க வேண்டும். அதனை முன்னிட்டு கூட்டுறவின் லட்சியத்தைப் பரப்பி மக்களிடையே கூட்டுறவு உணர்ச்சியை ஊட்டவேண்டும். இன்றைய தினம் கூட்டுறவாளர்கள் ஓர் உண்மையை கண்ணியமாக ஒப்புக்கொள்ளவேண்டி இருக்கிறது. அதாவது, கூட்டுறவு இயக்கம் அடைந்துள்ள வெற்றிகள் பலவற்றைவிட அதனால் ஏற்பட்டுள்ள தோல்வியே பொதுஜனங்கள் மனதைக் கவர்ந்திருப்பதாகும். கூட்டுறவின் நன்மையை அறியாதவர்களும், கூட்டுறவின் தத்துவத்தை உணராதவர்களும்கூட, கூட்டுறவு இயக்கத்தில் குற்றங்குறைகள் கண்டுபிடிப்பதில் திறமைசாலிகளாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதற்கெல்லாம் காரணமென்னவென்பதை சற்று ஆராய்ந்து பார்க்குமிடத்து உண்மை விளங்கும். இவை எல்லாம் மக்களின் செல்வ நிலையைக் காட்டிலும் ஒழுக்கத்தைப் பெரிதும் பொறுத்ததாக இருக்கிறது. கூட்டுறவு ஸ்தாபனங்கள் எதுவும் லேவாதேவிக் கடைகளோ, வியாபார ஸ்தலங்களோ, குமாஸ்தாக்களுக்கு வேலை கொடுக்கும் தொழிற்சாலைகளோ அன்று; கூட்டுறவு ஸ்தாபனங்கள் பாமர மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்ற எண்ணமுடையோருக்கு ஏற்ற இடங்களாகும். எனவே, கூட்டுறவு இயக்கத்தில் சேவை புரிய விரும்புவோர் உள்ளும் புறமும் ஒன்றுபட்டதியாக புத்தி நிறைந்தோராக இருத்தல் வேண்டும்.

### சீர் திருத்தம்

இன்றுள்ள நிலையில் கூட்டுறவு இயக்கம் சீர்திருத்தப்படவேண்டியதாக இருக்கிறது. கூட்டுறவு ஸ்தாபனங்களின் பொருளாதார நிலையில் தற்போதுள்ள முறையில் பெரும் மாறுதல் ஏற்படவேண்டும். மத்திய பாங்குகளில் தனித்த முறையில் பங்காளர்களாக இருப்போர்களில் பெரும் பான்மையோர் இதுவரை வகித்து வந்த முக்கிய ஸ்தானத்தை இழந்து விட்டனர். தனித்த பங்காளர்களை எல்லாம் அடியோடு மத்திய பாங்குகளிலிருந்து விலக்கிவிட வேண்டுமென்று நான் கூறவிரும்பவில்லை. ஆனால் அவர்கள் மத்திய பாங்குகளிலிருந்து வேலை செய்வது தங்கள் சுயமரியாதைக்கு ஒவ்வாததென்று எண்ணுவார்களானாலும் சரி, அல்லது வேறு எக்காரணம் கொண்டேனும் மத்திய பாங்குகளில் தாங்கள் இருப்பது விரும்பத்தக்கதல்லவென நினைப்பார்களானாலும் சரி, அத்தகையோர் தங்கள் பங்குத் தொகையை வாபீஸ் வாங்கிக்கொண்டு அங்கத்தினர் பதவியை விட்டு விலகுவதே சிலாக்கியமாகும். மத்திய பாங்குகளில் தனித்த பங்காளர்கள் இருந்தபோதிலும் சங்கங்கள் விசேஷ செல்வாக்குடன் இருக்க முடியுமென்பதில் சந்தேகமில்லை. மாகாண பாங்குகளின் முதன்மையான ஸ்தானம் மத்திய பாங்குகளுக்கேயாதலின் மாகாண பாங்கில் சங்கங்களின் செல்வாக்கு இருந்தே தீரும். மாகாண பாங்கு மத்திய பாங்குகளின் பிரதி நிதிகள் நிறைந்ததாகவும், மத்திய பாங்குகள் சங்கங்களின் பிரதி நிதிகள் அடங்கியதாகவும் இருப்பதால், மாகாண பாங்கின் முடிவுகள் பிரதி நிதிகளால் செய்யப்பட்ட தீர்ப்பாகுமேயன்றி மாகாண பாங்கு மத்திய பாங்குகளின்மேல் ஏற்றும் சுமையாகாது. இந்த மாதிரியான மாகாண பாங்கின் அமைப்பானது ஜனநாயகத் தத்துவம் உடையதென்பதை விரித்துக் கூறத் தேவை இல்லை.

### மேம் பார்வை

இதுவரையில் கூட்டுறவு ஸ்தாபனங்களின் செல்வ நிலை குறித்துப்பேசினேன். இதற்கு

அடுத்தபடியாக உள்ளது கூட்டுறவு சங்கங்களின் மேம்பார்வை. இவ்வேலையை யூனியன்கள் செய்துவந்திருக்கின்றன. நாம் புதியதோர் முறை காணும்வரை இவ்வேலையை யூனியன்களுக்கு விட்டுவைப்பதே உசிதம். ஆனால், பல இடங்களிலுமுள்ள சில யூனியன்கள் உயிர் அற்ற ஸ்தாபனங்களாகவும், பயனற்றதாகவும் இருப்பதுடன் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யாமலிருக்கின்றன என்பதை நாம் மறப்பதற்கில்லை. இத்தகைய சீர்கேடான நிலையிலுள்ள யூனியன்களைத் திருத்த வேண்டும். இவ்வேலையில் கவனிக்கவேண்டியவை சில உள. முதலாவது, யூனியன்கள் எண்ணிக்கை தேவைக்குமேல் அதிகமாக இருப்பதும், அவற்றின் செலவுகள் அதிகமாவதுமாகும். இது சம்பந்தமாக நாம் சிக்கன முறையைக் கையாளவேண்டும். உதவாக்கரையான யூனியன்களை மூடவேண்டும். சின்னஞ்சிறு யூனியன்கள் பலவற்றை ஒன்றாக இணைக்கவேண்டும். யூனியன்களுக்கெல்லாம் மத்திய பாங்கில் பிரதிநிதித்துவம் அளிப்பதென்ற பழக்கம் இருந்து வருகிறது. இன்றைய தினம் யூனியன்கள் எண்ணிக்கைப் பெருக்கிற்கும், மத்தியபாங்கின் நிர்வாக சபை அங்கத்தினர்கள் தேவைக்குமேல் அதிகரித்திருப்பதற்கும் காரணம் யூனியன்கள் ஒவ்வொன்றுக்கும் பிரதிநிதித்துவம் அளிப்பதென்ற வழக்கம் இருப்பதாலே யாகும். யூனியன்கள் என்னதான் பெரியவைகளாக இருப்பினும் அவற்றின் நிர்வாக சபை அங்கத்தினர்கள் மூன்று அல்லது ஐந்து பேருக்கு மேல் இருத்தல் கூடாது. மேலும், யூனியன் சிப்பந்திகள் பயிற்சி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். இது விஷயத்தில் ரிஜிஸ்டிரார் கவனம் செலுத்தவேண்டுமென விரும்புகிறேன். மேம் பார்வை உத்தியோகஸ்தர்கள் நியமனம், நிர்வாகம், மேம்பார்வை நிதி பரிபாலனம், ஆகியவை மத்திய பாங்கின் அதிகாரத்தில் இருக்கவேண்டும். யூனியன்களின் மானேஜர்கள் யூனியனுக்கும் மத்திய பாங்கிற்கும் பொறுப்பாளிகளாக இருத்தல் வேண்டும். இது போன்ற சீர்திருத்த வேலைகள் பல இடங்களிலும் நடைபெற்று வருவது மகிழ்ச்சியை அளிப்பதாக இருக்கிறது. **இம்மேம்பார்வை வேலைகளை மத்திய பாங்கிற்குப்பதிலாக செய்துவரும் தனித்ததோர் ஸ்தாபனம் நாலைந்து ஜில்லாக்களில் இருந்து வருகிறது. அதுவே, ஜில்லா பெடரேஷனாகும். இந்த ஜில்லா பெடரேஷன்கள் பயனற்றதும், வீண் பொருள் வ்ரயத்திற் குறியதும், சிக்கலானதுமான ஸ்தாபனங்கள் என்பதே எனது திட்டவட்டமான அபிப்ராயமாகும்.**

## சடன் சுமை

இது காலை பொதுஜனங்கள் மனதைக் கவர்ந்து வருவதும், அரசாங்கத்தார் கவனஞ் செலுத்தி வருவதுமான முக்கியமான தொன்றுண்டு. அதுதான் கிராம வாசிகளின் கடன் சுமை குறித்ததாகும். இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் புகுத்தப் பட்டதின் காரணம் பலவற்றுள் கடன் சுமையைக் குறைக்கலாம் என்பதொன்றாகும். இது பிரதானமானதோர் காரணமாக இல்லாவிட்டாலும் கூட்டுறவு இயக்கம் புகுத்தப்பட்டதற்கு இது அடிப்படையாக உள்ளது. விவசாய விருத்திக்கு நேர்மையான முறையில் தேவையான அளவு பொருளுதவி புரிதல் என்ற பிரசினைக்கும், விவசாயியானவன் தான் பட்ட பழைய கடனைத் தீர்ப்பதற்குப் பணம் கொடுத்துதவுவதற்கும் சம்பந்தமில்லை என்றே நான் நினைக்கிறேன். எனவே கிராமச் சங்கங்கள் விவசாய விருத்திக்காக நாணயச் செலாவணி செய்யலாமேயன்றி கிருஷிகளின் பழைய கடனைத் தீர்ப்பதற்கு பெரும் பொருளுதவி புரிதல் என்ற வேலையில் ஈடுபடுவது விரும்பத்தக்கதல்ல. கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்குச் செய்யக்கூடிய சேவை உற்பத்தித் துறையில் உதவி புரிந்து, உற்பத்திப் பொருளை நல்ல விலைக்குப் போகச் செய்து, கடன் சுமையையும், வட்டி விகிதத்தையும் குறைக்கவும், தற்போதைய லேவாதேவி முறையைக் கூடுமானால் திருத்தவோ அன்றேல் ஒழிக்கவோ முற்படுவதாகும். இதுவரையில் கூட்டுறவு பாங்குகள் கிருஷிகளுக்குப் பொருளுதவி புரிந்ததில் 1929—30ம் ஆண்டின் தொகை எவ்வருஷத்தைக் காட்டிலும் அதிகமானதாகும். இவ்வாண்டில் மத்திய பாங்குகள் சங்கங்களுக்குக் கொடுத்துள்ள பணம் 530 லெட்ச ரூபாயாகும். ஆனால் இவ்வாண்டிற்குப்பின் மத்திய பாங்கிற்கும், கிராமச்சங்கங்களுக்கும் நடந்த லேவாதேவி குறைய ஆரம்பித்து விட்டது. இதுசமயம் மத்திய



பாங்குகள் கிராமச் சங்கங்களுக்குக் கொடுத்துள்ள தொகை 340 லெட்ச ரூபாய்க்கு வந்துவிட்டது, இம்மாதிரியானக் குறைந்த லேவாதேவிக்குக் காரணம் மத்திய பாங்குகளில் போதிய பணமில்லாமை யன்று. மத்திய பாங்குகள் 340 லெட்ச ரூபாய் லேவாதேவி செய்த காலத்தில் இருப்பில் 520 லெட்ச ரூபாய் இருந்திருக்கிறது. மத்திய பாங்குகளில் லேவாதேவிக் குறைவுக்குக் காரணம் சங்கங்களின் அங்கத்தினர்கள் வாங்கிய கடனைத் தவணைப்படி செலுத்தாமையால் புதிய கடன் வாங்க அருகதையற்றவர்களாக இருப்பதும், இத்தகையோர் எண்ணிக்கை பெருகிக் கொண்டிருப்பதும், அகவிலைக் குறைவும், அதுகாரணமாக கிராமாந்திரக் கூட்டுறவாளர்கள் வாங்கிய கடனைத் தீர்க்கும் சக்தியற்றவர்களாக இருத்தலுமேயாகும். மத்திய பாங்குகளும், கிராமச் சங்கங்களும் கொடுத்த கடனை வசூலிப்பதில் கவனம் செலுத்தி வருகின்றனவே யன்றி கடன் கொடுக்கிற விஷயத்தில் எதுவும் முற்படவில்லை. இம்மாதிரியான நிலையில் மாறுதல் ஏற்படவேண்டும். அத்தகைய மாறுதலுக்கு ஓர் வழி காணவேண்டும். அன்றேல் கூட்டுறவு லேவாதேவி முறை சிதைந்து விடும். கடன் கொடுக்கும் காலத்தில் மாசூல் காலத்தை யொட்டி குறுகிய காலதவணை முறையைக் கைக்கொள்ள வேண்டும். கிருஷிகள் பழைய கடனைத் தீர்ப்பதற்கு ஒழுங்கான முறையில் நேர்மையான வகையில் புதிய கடன் கொடுத்து உதவுவது சிறந்த வழியாகும்.

## குறைகளைப் போக்கும் மார்க்கம்

தற்போதுள்ள குறைபாடுகளை நீக்கவும், பாங்குகளின் லேவாதேவியைப் பெருக்கவும் நான் சில யோசனை கூறவிரும்புகிறேன் அதாவது :—

(1) மத்திய பாங்குகளும், கிராமச் சங்கங்களும் ரிஜிஸ்திரார் அறிக்கையைக் கிரியாம்சத்தில் கொண்டுவர உற்சாகத்துடன் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். அதன் பிரகாரம் இதுவரை அங்கத்தினர்கள் வாங்கியுள்ள கடனின் வட்டியைத் தள்ளிக்கொடுத்து முதலை வசூல் செய்யவேண்டும்.

(2) மத்திய பாங்குகளும், கிராமச் சங்கங்களும் தனிப்பட்ட நபர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கடனின் தரத்தைப் பரிசீலனை செய்து அவற்றின் யோக்யதாம்சத்திற்குத் தக்கவாறு நீண்டகால தவணை அளிக்கலாம்.

(3) மத்திய பாங்குகளும், கிராமச் சங்கங்களும் நல்ல சங்கங்களுக்குப் பணம் கொடுத்து உதவவேண்டும். அவ்விதம் கொடுக்கும்போது குறுகிய காலதவணையிலும், மாசூல் காலத்தில் திரும்பச் செலுத்துவதென்ற நிபந்தனையின் பேரிலும், தற்போதைய கால நிலையை அனுசரித்துக் குறைந்த வட்டி விகிதத்தில், பணம் கொடுக்கவேண்டும்.

(4) கூட்டுறவு இலாக்கா தகுதியான இடங்களில் புதிய சங்கங்களைப் புதிய முறையில் அமைத்து குறுகிய கால தவணைக்கு மாசூலை அனுசரித்துப் பணம் கொடுத்து உதவ வேண்டும்.

இதுசமயம் சர்க்கார் புறக்கணித்த முக்யமானதோர் விஷயத்தைக் குறிப்பிடாமலிருப்பதற்கில்லை. மத்திய பாங்குகளில் இணைக்கப்பட்ட சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தினர்களுக்கு பொருளாதார மந்தத்தை உத்தேசித்து தற்காலீகமாக அங்கத்தினர்களின் தங்க நகைகள் அல்லது விளைபொருள்களை ஈடாக வைத்துக் கொண்டு பணம் கொடுப்பதென்ற திட்டத்தை ஏற்க சர்க்கார் மறுத்தது விசனிக்கத்தக்கதாகும். கூட்டுறவு இயக்கத்தில் சர்க்கார் கொண்டுள்ள குறுகிய மனப்பான்மையை நாம் மாற்றினாலொழிய, தற்போதைய நிலைமைக்குத் தகுந்த மாதிரி நடக்கவேண்டுமென்ற எண்ணத்தை சர்க்கார் உணரும்படி நாம் செய்தாலொழிய, இம்மாதிரியான சாதாரண உதவியைக் கூட நாம் நமது அங்கத்தினர்களுக்கு அளிக்க அருகதை அற்றவர்களாகிறோம்.

## நில அடமான பாங்குகள்

கிராம வாசிகளின் கடனை நிவர்த்திக்க நில அடமான பாங்குகள் தான் சிறந்த ஸ்தாபனங்கள் என்பதை பொதுவாகக் கூட்டுறவாளர்கள் யாவரும் ஏற்பர். 1934-ம் வருஷத்திய நில அடமான பாங்கு மசோதா நிறைவேறியதுடன்

சட்டமாக்கப்பட்டது இம்மாகாணத்தின் கூட்டுறவு இயக்க சரித்திரத்தில் குறிப்பிடத்தக்கதோர் சம்பவமாகும். மத்திய நில அடமான பாங்கு வெளியிடும் நாணயப் பத்திரங்களின் முதல், வட்டி, ஆகியவற்றினுக்கு சர்க்கார் உத்திரவாதம் அளித்திருக்கிறது. எனவே, இவற்றின் வேலைக்குத் தக்கபடி நீண்டகால தவணையில் இப்பாங்கில் பலர் பணம் போட முன்வருவர். நில அடமான பாங்குகள் பெரும்பாலும் பழைய கடன்களைப் போக்கவே பணம் கொடுக்கின்றன. இந்த பாங்குகள் விவசாய விருத்தியை உத்தேசித்துப் புதிய திட்டங்களை அமுலுக்குக்கொண்டு வரவும் பணம் கொடுத்து உதவலாம். இந்த பாங்குகள் சில புதிய முறைகளைக் கையாண்டால் இவற்றினால் பெரும் நன்மை உண்டாகும். இந்த பாங்குகள் வட்டி விகிதத்தைக் குறைக்கவேண்டும். மேலும், பணம் செலுத்தவேண்டிய தவணையை 40 வருடங்களுக்கு நீடிக்கவேண்டும். எனினும், கடனிலேயே மூழ்கிக்கிடக்கும் கிராம வாசிகளுக்குப் பூர்ணமான பரிகாரம் இப்பாங்குகளால் மாத்திரம் ஏற்படுமென சொல்லமுடியாது.

## சர்க்கார் கடமை

கிராம வாசிகளின் கடன்சுமை நீங்கவேண்டுமானால் சர்க்கார் அக்கறை காட்ட வேண்டும். கிராம வாசிகளின் கடன்சுமைக்கு மூலகாரணம் அவர்களின் வறுமையேயாகும். எனவே, சர்க்கார் தங்களது பொருள் நிர்வாக முறையைத் தக்க முறையில் திருத்தி அமைத்து கிராம வாசிகளின் வறுமையை நீக்கி அவர்களின் செல்வ நிலையை மேம்பாடடையச் செய்யவேண்டும். வரியின் பளுவு குறைக்கப்பட வேண்டும்; விவசாயப்பொருள் விருத்தியை உத்தேசித்து காப்பு வரி விதிக்கப்படவேண்டும். பொருள் உற்பத்திக்கும், விற்பனைக்கும் நல்லதோர் முறையில் ஓர் ஸ்தாபனம் அமைக்கப்பட வேண்டும். அதன் மூலம் கிருஷிகளின் செலவைக் குறைத்து வருமானத்தை அதிகரிக்கச் செய்யவேண்டும். நிலத்தைப் பண்படுத்தவும், மாடுகளை விருத்தி செய்யவும், பயிரிடும் முறையைப் புதுப்பிக்கவும் யோசனை கூற ஸ்தாபனங்கள் நிறுவப்படவேண்டும். கிருஷிகளுக்கு அறுவடைக்குப் பின்னர் ஓய்வு காலத்தில் வருமானத்திற்கான சில தொழில்களைப் புகுத்தவேண்டும். விவசாயப் பொருள்களின் ஏற்றுமதி இறக்குமதியை அனுசரித்து போக்குவரத்து சாதனங்கள் அமைக்க வேண்டும். அடுத்தபடியாக உள்ளதும், நாட்டில் அதிகமாகப் பேசப்படுவதும், ஆனால் கிரியாம்சத்தில் அக்கறை காட்டப்படாததுமான ஒன்றுள்ளது. அதுவே, கடன் கொடுத்தோருக்கும், கடன் பட்டோருக்கும் உள்ள சம்பந்தா சம்பந்தத்தில் சில மாறுதலை உண்டுபண்ணுவதாகும். அதாவது, உண்டியல் கடைக்காரர்களின் வட்டியைக் குறைத்து எதிர்காலத்தில் உண்டியல் லேவாதேவி முறையை மட்டுப் படுத்துவதாகும். தற்போது கடன் பட்டுள்ளோர் இன்றுள்ள நிலையில் அமுலில் இருக்கும் வட்டியின் பிரகாரம் கடனைத் திர்த்து கடன் சுமையிலிருந்து விடுதலையடைவதென்பது சாத்தியமான காரியமன்று. இது விஷயத்தில் சர்க்கார் தைரியமாகவும் முன்யோசனையுடனும் தலையிட்டு தக்கன செய்தல்வேண்டும். இது சமயம், பெரியார் கோல்ட்ஸ்மித் கூறிய வண்ணம் ஓர் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். அதாவது, ஒரு நாட்டின் செல்வம் அதன் வீரர்களான கிருஷிகளைப் பொருத்ததாகும்; அவ்வீரர்கள் மறைவரேல் அதனால் ஏற்படும் நஷ்டத்தை என்றும் ஈடு செய்யமுடியாது. இம்மாதிரியான கிருஷிகளின் வாழ்க்கையை மேம்பாடடையச் செய்வதில் கூட்டுறவாளர்களான நாம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம்; அக்கடமையைச் செலுத்த நாம் தவறக்கூடாது. நாம் கூட்டுறவு இயக்கத்தில் பூர்ண நம்பிக்கையுடனும், கூட்டுறவின் லெட்சியத்திற்கு உண்மையாகவும் நடப்போமாகில் அதுவே தேசீயப் புனருத்தாரணத்திற்கு மகத்தானதோர் சக்தி அளிப்பதாகும்.

---



# உபாத்திமார்கள் சங்க மகாஜன சபைக்கூட்டம்

### சிப்பந்திகள் பாங்குகளைப்பற்றி ரிஜிஸ்திரார் அபிப்பிராயம்

சென்னை உபாத்தியாயர்கள் கூட்டுறவு சங்க வருடாந்திர மகாஜன சபைக்கூட்டம் மார்ச்சு-மீ 18-உ கூட்டுறவு ரிஜிஸ்திரார் திரு. தெய்வசிகாமணி முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுகாலை அவர் நிகழ்த்திய சொற்பொழிவின் சாராம்சமாவது :—

இதுசமயம் நான் சிப்பந்திகள் சங்கங்களைப் பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். சென்ற சில மாதங்களுக்குமுன் பெரிய குளத்தில் நடைபெற்ற நகர பாங்குகள் மகாநாடு உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். அதுசமயம் சிப்பந்திகள் சங்கங்களைப்பற்றி நான் சில வார்த்தைகள் கூறி இருந்தேன். அது சம்பந்தமாக சென்னை கூட்டுறவு சஞ்சிகை ஓர் தலையங்கம் எழுதி இருந்தது. சிப்பந்திகள் சங்கங்கள் விஷயத்தில் நான் தாராள சிந்தனை காட்டவில்லை என்பதாக அப்பத்திரிக்கையின் ஆசிரியர் கூறியுள்ளார். நான் பெரியகுளத்தில் பேசியதை மீண்டும் தெளிவு படுத்திக் கூற விரும்புகிறேன். நான் பெரிய குளத்தில் கூறியதாவது :—சிப்பந்திகள் சங்கத்தைச் சேர்ந்த ஒருவர் தனக்கு தேவையான செலவுக்குப் பணம்வேண்டும்போது கடன் வாங்க முற்படுவாரானால் அவரது கடன் விண்ணப்பத்தை நன்றாகப் பரிசீலனை செய்ய வேண்டும். குறுகிய காலத்தில் குறிப்பிட்ட தவணைப்படி வாங்கிய கடனைச் செலுத்தக்கூடிய சக்தி விண்ணப்பதாருக்கு உண்டா என்பதைக் கண்டறிய வேண்டும். நகர பாங்குகள், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் சங்கங்கள், வியாபார ஸ்தல ஊழியர்கள் சங்கங்கள், ரயில்வே ஊழியர்கள் சங்கங்கள் ஆகியவற்றில் மாதச் சம்பளக்காரர்கள், தினச் சம்பளக்காரர்கள் முதலியோர் எவ்வளவு தூரம் கடன் பட்டிருக்கிறார்கள் என்பதைக் கவனித்தால் இவர்களுக்கென தனித்த சங்கங்கள் அளித்ததில் நாம் பெரும் தவறு செய்துள்ளோம் என்று நினைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மாதச்சம்பளம், தினச்சம்பளம் பெறும் சிப்பந்திகள் மாதந்தோறும் தவணைப்படி வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்துகிறார்கள் என்பது உண்மையே; ஆனால், அவர்கள் சங்கவிதி அனுமதிக்கும்படியான நீண்டகால அளவின் பிரகாரம் நெடுநாளைய கடன்காரர்களாக இருக்கிறார்கள். இம்மாதிரி சிப்பந்திகள் கடன் பட்டிருத்தல் கூடாதென்பதே எனது விருப்பம். இவ்விதம் கடனாளிகளாக சிப்பந்திகள் இருப்பதை நாம் தடுக்க முற்படவேண்டும். ஓர் காரியாலயத்தில் வேலை பார்க்கும் ஊழியர் கடன் வாங்கவேண்டிய அவசியம் ஒரு போதும் இல்லை என நான் கூறவில்லை. ஆனால், கடன் வாங்கவேண்டியதின் தேவை மிக அவசியமானதெனத் தோன்றினாலொழிய அவர்களைக் கடன் வாங்குவதற்கு அனுமதிக்கக் கூடாதென்று சொல்வேன்.

ஆதியில் சிப்பந்திகள் சங்கம் நிறுவப்பட்ட விபரத்தை இதுசமயம் குறிப்பிட விரும்புகிறேன். ரிவன்யூ போர்ட், அக்கவுண்டு ஜெனரல் காரியாலயத்தில் வேலை பார்க்கும் உத்தியோகஸ்தர்கள் மார்வாடிகளிடம் கடன் வாங்கி வந்தனர். அவர்கள் வாங்கும் கடனுக்கு 100-க்கு வருடம் 1-க்கு 150 ரூபாய் விகிதம் வட்டியாகச் செலுத்தி வந்தனர். இதனை அறிந்ததும் இவர்களுக்கென ஓர் கூட்டுறவு சங்கம் அமைப்பதென முடிவு செய்தோம். அதன்படி இவர்களுக்கு 1912-ம் வருடம் ஓர் சங்கம் நிறுவினோம். அதுகாலை நாங்கள் எதிர் பார்த்ததொன்றுண்டு. அதாவது, அங்கத்தினர்கள் தங்களுக்கு எஞ்சிய பணத்தை சங்கத்தில் போடுவார்கள் என்பதாகும். அதனை முன்னிட்டு சங்கத்தில் சேரும்படியான அங்கத்தினர்களின் எஞ்சிய பணத்தை வேறு சங்கங்களுக்குக் கடனாகக் கொடுக்கலாமென சங்க விதியில் இடமேற்படுத்தினோம். இந்த முறையில் கொஞ்ச காலம் இச்சங்கம் வேலை செய்து வந்தது. உயர்தர சம்

பளம் பெரும் சிப்பந்திகள் தங்களுக்கு மிஞ்சிய பணத்தை சங்கத்தில் போட்டு வந்தார்கள். அதனால் சங்கத்தில் பெரும் நிதி சேர்ந்திருந்தது. இச்சங்கத்துடன் இணைக்கப்பட்டிருந்த கிராமச்சங்கங்கள் பல இருந்தன. அவைகளுக்குப் பண உதவி செய்யப்பட்டது. இதுபோன்று காரியாலயங்கள் தோறும் கூட்டுறவுச் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அதன் பயனாக சிப்பந்திகள் சங்கங்களின் எண்ணிக்கை பெருகியது. ஆனால் மூந்திய நிலைமையில் பெரும் மாறுதல் ஏற்பட்டு விட்டது. ஏதோ ஒரு சிலர் தங்கள் பணத்தை சங்கத்தில் போட்டு வந்தாலும் பெரும்பாலான அங்கத்தினர்கள் கடன் வாங்குபவர்களாகவே காணப்படுகின்றனர். இத்தகையோர் எண்ணிக்கையே நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு போகிறது. இதில் மிக மோசமானதென்னவென்றால் தனித்த நபர்கள் வாங்கும் கடன் தொகையின் அளவை அதிகரிக்க வேண்டும் என சிலர் கிளர்ச்சி செய்வதாகும். இதனால் இரண்டொரு சங்கங்களில் ஓர் அங்கத்தினர் தீன் வாங்கும் சம்பளத்தைப் போன்று 10 மடங்கு கடன் வாங்கலாம் என்பதாகவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

சிப்பந்திகள் சங்கத்தின் அங்கத்தினர்கள் தவணை தவறாமல் வாங்கிய கடனைச் செலுத்தி வருகிறார்கள் என்பது வாஸ்தவந்தான். ஆனால், அவர்கள் செலுத்தி வரும் முறையிலிருந்து வாங்கிய கடன் உண்மையான முறையில் செலுத்தப்பட்டதாகாதென்றே கூறுவேன். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் தாங்கள் பட்ட கடனுக்காக தங்களது மாதாந்திரச் சம்பளத்தில் ஓர் பாகத்தைப் பிடித்துக்கொள்ளுமாறு அனுமதி அளிக்கிறார்கள். தாம் கட்டவேண்டிய தொகை பூராவும் சம்பளத்திலிருந்து பிடிக்கப்பட்ட மறு வாரமே மீண்டும் கடன் வாங்க ஆரம்பித்து விடுகிறார்கள். இந்த மாதிரி ஒரு மாதத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பல தடவைகளில் கடன் வாங்கி இருப்போர் பலருண்டு. சிப்பந்திகளின் சங்கங்களில் அவசர காரியத்தை உத்தேசித்து கடன் கொடுக்க விதி இருக்கிறது. இவ்விதி எவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது என்பதற்கு எத்தனையோ அத்தாட்சிகள் இருக்கின்றன. ஒரு அங்கத்தினர் ஒரு சமயத்தில் ஒரு மாதத்தில் மூன்று நான்கு முறை கடன் வாங்கி இருக்கிறார். செல்வாக்குள்ள சில நபர்கள் நினைத்த போதெல்லாம் கடன் வாங்கி வருகின்றனர். நமக்குள்ள அனுபவத்திலிருந்து இக்கெட்ட பழக்கம் நம்மாகாணத்தில் மாத்திரம் இருந்து வரவில்லை, எல்லா மாகாணங்களிலும் இருந்து வருகிறது என தெரிகிறது.

நான் வற்புறுத்திக்கூற விரும்புவதெல்லாம் அங்கத்தினர்கள் கடன் வேண்டுமென்பார்களாகில் அது குறித்து அதிக கவனஞ்செலுத்த வேண்டும். கடன் எக்காரணத்தைப்பற்றி வாங்கப் படுகிறதென்பதையும், அவ்விதம் வாங்குவது அவசியத்தை முன்னிட்டா என்பதையும் கடன் அனுமதிப்புக் கமிட்டியார் ஆராய்ச்சி செய்து திருப்திகரமான முடிவுக்கு வரவேண்டும். அத்தகைய கமிட்டியில் இருக்கும் அங்கத்தினர்கள் கடன் வாங்கவேண்டிய நிலையிலே உள்ளவர்களாகவோ, கடன் பட்டவர்களாகவோ இருத்தல் கூடாது. பொதுவாக உற்று நோக்குமிடத்து மாதாந்திரச் சம்பளக்காரர்கள் அடிக்கடி ஏற்படும் செலவுக்குக் கடன் வாங்குவதென்பது கூடாத காரியம். இவையாவும், அவர்கள் சம்பளத்திலிருந்து பார்த்துக் கொள்ள வேண்டியதாகும். கல்யாணம், எதிர்பாராத வியாதி போன்றவைகளால் ஏற்படும் செலவுக்கு சம்பாதித்யத்திலிருந்து எஞ்சும் தொகையிலிருந்து பார்த்துக்கொள்ள வேண்டும். அவ்விதம் கையில் சேமிப்பு இல்லாவிடில் கொஞ்சம் கடன் வாங்கிக்கொள்ளலாம். சிக்கனமான வாழ்வு நடத்தவும், மிச்சம் பிடிக்கவும் கூடிய முறையைப் போதிக்கக்கூடிய வகையில் சிப்பந்திகள் சங்கம் திருத்தி அமைக்கப்படுமாகில் அவைகளின் தேவையை நாம் ஏற்கலாம். இவ்விதமாக இரண்டொரு சங்கங்கள் நடந்து வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவை தங்களின் அங்கத்தினர்களின் மாதாந்திரச் சம்பளத்திலிருந்து மிச்சம் பிடிப்பதென்ற பழக்கத்தை கட்டாயப்படுத்தி வருகின்றன. அதன்மூலம் நன்றாக வேலை செய்கின்றன.

நான் கூறும் யோசனை எல்லாம் கடன் கொடுக்கிற விஷயத்தில் கடிசாக இருக்கவேண்டும், உண்மையான தேவையை முன்னிட்டுக் கடன் கொடுத்தல்

(20-ம் பக்கம் பார்க்க)



# மேல்நாடும் கீழ்நாடும்

**சர். சி. பி. ராமசாமி அய்யர் சொற்பொழிவு**

கும்பகோணம் மத்திய கூட்டுறவு பாங்கு காரியாலயத்திற்கென அமைக்கப்பட்ட கட்டிடத்தை சர். சி. பி. ராமசாமி அய்யர் ஏப்ரல்-மீ 17-உ திறந்து வைத்தார். அதுகாலை அவர் நிகழ்த்திய சொற்பொழிவின் சாராம்சம் பின்வருமாறு :—

இந்நாட்டில் சாமான்கள் உற்பத்தி செய்வதென்பது ஓர் குறிப்பிட்ட அளவுதான் கூடும். பொதுவாகக் கூறுமிடத்து நாட்டின் க்ஷேமமும் எதிர்கால விருத்தியும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட விவசாயம், கைத்தொழில் அதிலும் குடிசைத் தொழில் ஆகியனவற்றைப் பொறுத்ததாக இருக்கிறது. இவ்விரண்டினுக்கும் கூட்டுறவு இயக்கம் உற்ற துணையாகும். நம் நாட்டில் பல நிலச்சுவாந்தார்கள் இருக்கிறார்கள். குடும்பச் சொத்துப்பிரிவினைப் பிரகாரம் இரண்டொரு தலை முறைக்குள் நிலம் முதலியன பிரிக்கப்பட்டு பெரிய குடும்பங்கள் சின்னாபின்னமாவதை நாம் காண்கிறோம். துரதிருஷ்டவசமாக நம் நாட்டினர் பங்காளர்களாக இருந்து தொழில் நடத்தும் முறையை இன்னும் முற்றும் உணர்ந்தார்களில்லை. இதுகாரணமாக பல தொழிற்சாலைகள் கதவடைக்கப்பட்டு சீர்கேடடைந்திருப்பது நம் நாட்டில் வாடிக்கையாக இருக்கிறது. இந்நிலையில் கூட்டுறவு இயக்கம் பொதுஜனங்களை ஒன்றுபடுத்த உதவுகிறது. விவசாயப் பொருள் உற்பத்திக்கும், விற்பனைக்கும், கைத்தொழிலுக்கும் கூட்டுறவு இயக்கம் ஐக்கிய முறையைப் போதிப்பதின் மூலம் மக்களிடையே ஒத்துழைப்பு உதயமாகிறது. ஹாலந்து, டென்மார்க்கு முதலிய நாடுகளில் பிரயாணம் செய்தோர் கூட்டுறவு இயக்கத்தின் மகிமையை எளிதில் அறியலாம். இங்கிலாந்து செல்வம் நிறைந்ததோர் தேசம். டென்மார்க்கோ இருக்கும் இடத்தை விளக்கேற்றிப் பார்க்கவேண்டிய நிலையிலுள்ள ஓர் நாடு. அங்ஙனமிருக்க, பால், வெண்ணை, முட்டை முதலியவற்றை இங்கிலாந்துக்கு அனுப்புவதில் டென்மார்க்கின் நிபந்தனையின்படி இங்கிலாந்து கட்டுப்படவேண்டிய நிலையில் இருக்கிறதே யன்றி தன் இஷ்டம்போல் நடக்க முடியவில்லை. இம்மாதிரியான மகத்தானதோர் சக்தி டென்மார்க்கிற்கு ஏற்பட்டிருப்பது அந்நாட்டில் கூட்டுறவு இயக்கம் வேரூன்றி இருப்பதின் பயனாகும். டென்மார்க்கெங்கும் பொருள் உற்பத்தியும், விற்பனையும் கூட்டுறவு முறையில் நடந்துவருவதே அதன் இன்றைய உன்னத நிலைக்குகாரணம். கூட்டுறவு முறையில் பொருள் உற்பத்திக்கும், விற்பனைக்கும் பணம் அவசியம் தேவை. இத்தேவையைப் பூர்த்தி செய்வதற்கே கூட்டுறவு பாங்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், நம் நாட்டினர் இப்பாங்குகளை மேல் நாட்டினரைப் போன்று சரியான முறையில் உபயோகப்படுத்திக் கொள்ளவில்லை.

## வெற்றிக்கு வழி

கூட்டுறவு ஸ்தாபனங்கள் வெற்றிகரமாக நடக்கவேண்டுமானால் பிரதானமான தேவையாக இருப்பது பணமன்று; மனித பலமாகும். எந்த இயக்கத்திற்கும் பண பலத்தைக் காட்டிலும் ஆள்பலமே அதிகம் தேவை. அதிலும் கூட்டுறவு இயக்கத்திற்கு ஆள்பலமே மிகமிக இன்றியமையாதது. பல ஸ்தாபனங்கள் பணமின்றி ஆரம்பிக்கப்பட்டு முன்னேற்றமடைந்திருக்கின்றன. அவற்றின் வெற்றி தியாக புத்தியுள்ள தன்னலமற்ற ஊழியர்களின் சேவையைப் பொருத்த தாகும். எனவே, இன்று கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு பல தொண்டர்கள் தேவையாக இருக்கின்றனர். அடுத்தபடியாகக் கூட்டுறவு இயக்கம் தளர்ச்சி அடையாமலிருக்கத் தேவையாக இருப்பது கடுமையான சட்ட திட்டங்களாகும். விதிகளைப் புரக்கணித்து, ஒழுங்கீனமாக நடப்போர் பலர் நாட்டில்இருக்கின்றனர்

அத்தகையோர் செய்கையால் கூட்டுறவு இயக்கத்தில் பல குறைபாடுகள் தென்படுகின்றது. அக்குறைபாடுகளைப் போக்க சரியான சட்ட திட்டங்கள் ஏற்படுத்தப்படவேண்டும்.

இறுதியாகக் கூறுமிடத்து, தனி உரிமை கொண்ட நிலம் படைத்தோரும், போதிய நிதியற்றோரும், இயற்கை அன்னையின் ஆசீர்வாதத்தை அடையாதோரும், சின்னஞ்சிறு குடிசைத் தொழிற்சாலையை நிர்வகித்து வருவோரும் நிறைந்த இந்நாட்டிலே இவர்கள் யாவரையும் ஒன்றுபடுத்த, விவசாயப்பொருள் விளைவு, சாமான் உற்பத்தி, விற்பனை ஆகியவற்றை கூட்டுறவு முறையில் ஏற்படுத்தினாலன்றி நம்நாடு விமோசனமடைய முடியாது. நமது எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக இருக்கிறது. அந்நிய நாடுகளின் போட்டா போட்டி பெருகிவருகிறது. இது சமயம் நமக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலையை சமாளிக்கவேண்டுமானால் அரசியல் துறையிலும், சமூதாய துறையிலும், பொருளாதார துறையிலும் நமது நிலையை மேன்மைப் படுத்திக்கொள்ள முற்படவேண்டும்.

ராவ் சாகிப் வி. ஆர். லெட்சுமி ராகவ அய்யங்கார் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் கலைந்தது.

---

## உபாத்திமார்கள் சபைக்கூட்டம்

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்பதே யாகும். மாதாந்திர சம்பளம் பெறும் சிப்பந்திகள் கடன் காரர்களாக இருக்கக்காரணம் அவர்களில் சிலர் ஆடம்பர வாழ்க்கை நடத்துவதும், சிலர் குறைந்த சம்பளம் வாங்குவதுமாகுமென்று சென்னை கூட்டுறவு சஞ்சிகை செப்புகிறது. இவ்விரண்டு காரணங்களையும் ஒட்டி எவருக்கும் கடன் கொடுத்தல் கூடாதெனச் சகலரும் தெளிவாக அறியவும். ஒரு மனிதன் குறைந்த சம்பளம் வாங்குவனாகில் அவன் குறையைப்போக்கும் மார்க்கம் கடன் கொடுப்பதன்று; அவ்விதம் செய்வதானது அவனைக் கெடுப்பதுடன் அவனது வாழ்க்கையை பாழ்படுத்துவதாகும். அதுபோலவே, ஆடம்பரமான வாழ்க்கை நடத்தும் மனிதனை எடுத்துக்கொள்வோம். அவனுக்கு சுலபமாகக் கடன் கொடுப்பதால் நாம் அவனது ஆடம்பர வாழ்க்கைக்கு அனுகூலமாக இருந்து அவனைக் கெடுப்பவர்களாகிறோம். கடனைக்கொண்டு ஒருவன் வாழ்வு நடத்தவும் முடியாது; கடன் வாங்கி ஒருவன் ஆடம்பரமாகக் காலங்கழித்தலும் இயலாது. எனது கவனத்திற்கு வந்த ஒரு சம்பவத்தை இதுசமயம் குறிப்பிட விரும்புகிறேன். சிப்பந்திகள் சங்கத்தின் அங்கத்தினர் ஒருவர் காரியாலயத்தில் புகுந்த இரண்டு மணி நேரத்தில் கடன் பெற்ற கதையைச் சொல்லுகிறேன். அவர் காரியாலயத்திற்குள் சென்றதுதான் தாமதம்; கடன் விண்ணப்ப பாரம் ஒன்றைப் பூர்த்தி செய்து அனுப்பினார்; 15 நிமிஷத்தில் அனுமதி கிடைத்தது; காரியதரிசி செக்கு ஒன்று எழுதிக்கொடுத்தார்; செக்கு பாங்கில் மாற்றப்பட்டது; இரண்டு மணி நேரத்திற்குள் பணம் வீடு போய்ச் சேர்ந்தது. நகர பாங்குகளிலோ, நெசவாளிகள் போன்ற தொழிலாளர்கள் சங்கத்திலோ கடன் கொடுக்கப்படும் பக்ஷத்தில் அதன் நோக்கம் வேறு. ஒரு வியாபாரியோ, நெசவாளியோ, அல்லது ஆசாரியோ கடன் வாங்கினால் அப்பணத்தை முதலாகக் கொண்டு ஓர் தொழில் செய்கின்றனர். அதிலிருந்து கிடைக்கும் லாபத்தையே வாங்கிய கடனுக்குக் கட்டுகின்றனர். சிப்பந்திகள் சங்கத்தில் வாங்கப்படும் கடன் இவ்வாறு கட்டப்படுவதன்று. சில சிப்பந்திகள் சங்கத்தின் புள்ளி விபரத்திலிருந்து தெரிவதென்னவென்றால் அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கடன் தொகையை அவர்களின் தரத்துடனும், மாதாந்திர வருமான சக்தியுடனும், ஒப்பிட்டுப் பார்த்தால் மிக அதிக மென்றே கூறவேண்டி இருக்கிறது.

இவ்வளவு தூரம் நான்கூறியதெல்லாம் நல்லெண்ணத்துடனும், சந்தேக நிவர்த்தியை உத்தேசித்தும், தப்பபிப்ராயத்தை மாற்றவுமே யாகும். இன்று உங்களை சந்திக்க சந்தர்ப்பமளித்த உங்களுக்கு எனது வந்தனம் உரியதாகுக.

---



# கூட்டுறவு இயக்க நிலைமை

## கனம் பி. டி. ராஜன் கருத்து

சென்னை அரசாங்க இரண்டாவது மந்திரி கனம் பி. டி. ராஜன் ஏப்ரல் மீ 18 உ மதுரைக்கு விஜயம் செய்தார். அன்று மாலையில் மதுரை—ராமனுதபுரம் மத்திய கூட்டுறவு பாங்கு, பெடரேஷன் ஆகியவற்றின் காரியலாயங்களைப் பார்வையிட்டார். மதுரை கூட்டுறவாளர்கள் கனம் ராஜன் அவர்களுக்கு ஓர் விருந்தளித்தனர். அவ்விருந்தில் உத்தியோகஸ்தர்களும், பிரபல கூட்டுறவாளர்களும், கலந்து கொண்டிருந்தனர். தேநீர் விருந்திற்குப் பின் சங்கீதக் கச்சேரி நடந்தது. மத்திய பாங்குத் தலைவர் திரு. ஈ. எஸ். சுந்தா மந்திரி ராஜன் அவர்களைப் பாராட்டிப் பேசுகையில் பெரிய குளத்தில் கூட்டுறவாளர்களிடையே ஏற்பட்டுள்ள பிளவைக் குறிப்பிட்டு, அங்கு கனம் ராஜன் அவர்கள் ஓர் முறை விஜயஞ் செய்தால் சமரச மேற்படக்கூடுமெனத்தான் நம்புவதாகக் கூறினார்.

### கனம் மந்திரி பதில்

நான் மதுரைக்குப் பல முறை வந்து போயிருக்கிறேன். அக்காலத்தில் கூட்டுறவாளர்களிடையே நான் போதிய காலத்தை செலவு செய்யவில்லை என்பது உண்மையே. அதற்குக் காரணம் கூட்டுறவு இயக்கத்தில் நான் போதிய அக்கரை காட்டவில்லை என்பதாகாது. எனக்கேற்பட்டுள்ள பல வேலைகள் காரணமாக போதிய நேரமின்மையே யாகும். நல்ல வேளையாய் இந்தத்தடவை எனக்கு வேண்டிய அவகாச மிருந்தமையால் உங்களிடையே காலங்கழித்தேன்.

மதுரை—ராமனுதபுரம் கூட்டுறவாளர்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்திருக்கின்றனர் என்பேன். ஏனைய ஜில்லாக்கள் மதுரை—ராமனுதபுரம் ஜில்லாக்களைப் பின்பற்ற வேண்டிய நிலையில் கூட்டுறவு இயக்கம் முற்போக்கடைந்திருக்கிறதென்று கூறவிரும்புகிறேன். இவ்விதம் நான் கூறுவதாவது இந்த ஜில்லாவைச் சேர்ந்தவன் என்பதற்காக அன்று; நான் இங்குள்ள உண்மையான நிலையையே எடுத்துக் கூறுகிறேன். உதாரணமாக, மத்திய பாங்கையும் பெடரேஷனையும் எடுத்துக் கொண்டால் இங்கு நெருங்கிய நேசப்பான்மை இருக்கிறது. ஏனைய ஜில்லாக்களின் நிலைமையோ வேறு. மத்தியபாங்கும் பெடரேஷனும் நல்லுணர்ச்சியுடன் வேலை செய்ய ரிஜிஸ்திராரும், ஜாயிண்டு ரிஜிஸ்திராரும் மிகுந்த பிரயாசை எடுத்துக்கொள்ள வேண்டி இருக்கிறது. அநேகமாகக் கூட்டுறவு சங்கங்களெல்லாம் அனுபவம் நிறைந்தவர்கள் வசமே இருக்கிறது. எனினும் கூட்டுறவு இயக்கம் எதிர்பார்த்த அளவு திருப்திகரமான உச்ச நிலையில் இல்லை. அதற்காக நாம் எவர் மீதும் குறை கூறுவதற்கில்லை. இந்நிலைக்குக் காரணம் நாட்டில் ஏற்பட்டுள்ள வியாபார மந்தமும், பண நெருக்கடியுமாகும். கூட்டுறவு இலாக்கா மந்திரி என்ற முறையில் நான் பலசங்கங்களை மூடி இருக்கிறேன். மூடுகிற விஷயத்தில் ரிஜிஸ்தாரார் செய்கையை அங்கீகரித்திருக்கிறேன். சில சமயங்களில் யூனியன்களும், சிற்சில பாங்குகளும் மூடப்பட்டிருக்கின்றன. இங்ஙனம் சென்ற 3½ ஆண்டுகளாக மந்திரி எந்த முறையில் பல சங்கங்களை மூடுமாறு உத்திர விட்ட போதிலும் மதுரை—ராமனுதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த ஒருசங்கமாவது மூடப்படவில்லை. இந்த ஜில்லாவில் கூட்டுறவு இயக்கம் நன்னிலையில் இருக்கிறதென்பதற்கு இதுவே ஓர் அத்தாட்சியாகும்; இதன் பெருமை மதுரை—ராமனுதபுரம் ஜில்லா கூட்டுறவாளர்களின் சேவையைப் பொருத்ததே. பல்வேறு வகுப்பினர்களும், பல்பல்வேறு கொள்கையினரும், பலதிறப்பட்ட அரசியல் கட்சியினரும், ஒன்றுபட்டு ஓர் துறையில் வேலை செய்யவும், அதன் மூலம் விவசாயிகளின் நிலையை விருத்தி செய்யவும் உதவியாக உள்ள கூட்டுறவு இயக்கம் இந்த ஜில்லாவில் மெச்சத்தக்க முறையில் வேலை செய்திருப்பது பாராட்டத்தக்கது.

திரு. ஈ. எஸ். சுந்தா அவர்கள் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனி கலைந்தது.

# சென்னையில் கூட்டுறவு இயக்கம்

## சர்க்கார் அறிக்கை

சென்னை அரசாங்க அபிவிருத்தி இலாக்கா மார்ச்சு-மீ 10-உ வெளியிட்டுள்ள அறிக்கையின் படி தெரியும் விபரமாவது :—

விவசாயப் பொருள்களின் விலைகுறைவும், வியாபார மந்தமும் கூட்டுறவு இயக்கத்தை பெரிதும் பாதித்துள்ளது. கூட்டுறவு இலாக்காவும் கூட்டுறவாளர்களும் என்னதான் பிரயாசை எடுத்துக்கொண்டும் சரியானபடி பணவசூல் ஆகவில்லை. வசூல் ஆகவேண்டியதுகை பெருகிக் கொண்டே போகிறது. சரியானபடி வேலை செய்யாத சங்கங்கள் விஷயத்தில் கூடுமானல் திருத்துதல் அன்றேல் ஒழித்தல் என்ற முறையைப் பின்பற்றப்படுகிறது. கிராமச் சங்கங்களின் பொருளாதார நிலையைப் பரிசீலனை செய்யுமாறு ரிஜிஸ்திரார் மத்திய பாங்குகளை வற்புறுத்தி வருகிருர். இவ்வேலையை மத்திய பாங்குகள் தவக்கமின்றி செய்யுமென எதிர் பார்க்கப்படுகிறது. சுபேக்ஷமான நிலையிலிருந்த காலத்தில் விவசாயிகள் பட்ட கடனுக்காக செலுத்தவேண்டிய பாக்கியை விவசாயப் பொருள் விலை குறைந்துள்ள இக்காலத்தில் செலுத்துவதென்ருல் பெரிதும் கஷ்டப்படுகிருர்கள். இத்தகையோர் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. மத்திய பாங்குகளில் லேவாதேவி 92·57 லெட்ச ரூபாய் வரையே நடந்திருக்கிறது. ஆனல், அவை கிராமச் சங்கங்களுக்கு தற்காலிகமாகக் கொடுத்துள்ள வகையில் 69·93 லெட்ச ரூபாய் செலாவணியாகி இருக்கிறது. லேவாதேவிக் குறைவும், டிபாசிட்டுத்துகை பெருக்கும், மத்திய பாங்குகளின் பண இருப்பை அதிகரிக்கச் செய்ததின் மூலம் தங்கி நிற்கும் துகை ஒரு கோடிக்கு மேலாகி விட்டது. மாகாண பாங்கில் தங்கியுள்ள இருப்பு 75 லெட்ச ரூபாயாக இருக்கிறது. இம்மாதிரியாக உபயோகப்படுத்தப்படாது மூலையில் தூங்கும் பணத்தை என் செய்வதென்ற பிரசினை சர்க்கார் கவனத்தைக் கவர்ந்தது. லோகல் போர்டாரின் பணத்தை மறு உத்திரவு கிடைக்கும்வரை டிபாசிட்டாக ஏற்கவேண்டாமென்பதாக மத்திய பாங்குகளுக்கு அறிவிக்கப்பட்டது. ஏற்கனவே, லோகல் போர்டாரிடமிருந்து டிபாசிட்டாகப் பெற்றுள்ள பணமிருப்பின் அவற்றின் காலத்தை மீண்டும் நீடிக்காமல் குறித்த காலத்தில் மாகாண பாங்கின் உதவியைக்கொண்டு செலுத்திவிட வேண்டுமென்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. மேலும், லோகல் போர்டுகளை பாங்கில் டிபாசிட்டாகப் போட்ட பணத்தை வட்டி நஷ்டமேற்படாத முறையில் மத்திய பாங்குகள் திருப்பிக் கொடுத்தால் பெற்றுக்கொள்ளுமாறும் மீண்டும் டிபாசிட்டு செய்யவேண்டா மென்பதாகவும் சர்க்கார் கூறி இருக்கின்றனர். இந்த மாதிரியான முறையினல் கூடிய விரைவில் மத்திய பாங்குகளில் தங்கி இருக்கும் பணம் குறையக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

சென்ற வருடத்தைக் காட்டிலும் இவ்வாண்டில் புதியதாகப் பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கைக் குறைந்திருக்கிறது. ஆனல், பதிவு செய்யப்பட்ட பல பழைய சங்கங்கள் அநேகம் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. கிராமச் சங்கங்களல்லாத ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள் விளைபொருள் குறைவால் அவ்வளவாகப் பாதிக்கப் படவில்லையாகையால் அவற்றின் நிலைமை திருப்திகரமாகவே இருக்கிறது. நெசவுத் தொழிலாளருக்காகப் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் பதனிடாத பொருளை வாங்குவதிலும், சாமான்களை விற்பதிலும் விருத்தி அடைந்திருப்பினும் நல்ல லாபம் ஏற்படாததுடன் பழைய நிலையில்தான் இருந்து வருகிறது. தென் இந்திய கூட்டுறவு இன்ஷியோரன்ஸ் சங்கம் இவ்வாண்டில் திருப்திகரமான நிலையை அடைந்திருக்கிறது.

மத்திய நில அடமான பாங்கு இவ்வாண்டில் 10·8 லெட்ச ரூபாய்க்கு நாணயப்பத்திரம் வெளி

(23-ம் பக்கம் பார்க்க)



# மத்திய பாங்குகளில் பணப்பெருக்கு

## ஆனல் வட்டி விகிதம் குறைந்தபாடில்லை

### கமிஷன் ஏஜண்டுகள் வேண்டாம்

ஜில்லா பாங்குகள் மாகாண பாங்கின் சிருஷ்டிகளா?

திரு. செ. எல். பந்தாரி கூறும் யோசனை

சென்னை மாகாண கூட்டுறவு பாங்கின் (1933-ஞ) ஜூன்-மீ 30-உ இறுதியுடன்) ஒரு வருடத்திய நடப்பு அறிக்கை வெளி வந்துள்ளது. அதிலிருந்து மாகாண பாங்கில் டிபாசிட்டாக சேர்ந்துள்ள பணம் 208 லெட்ச ரூபாய் என்றும், அதில் ஜில்லா பாங்குகள் 10 லெட்ச ரூபாய்வரைதான் வாங்கி இருக்கின்றன என்றும் தெரிகிறது. இதிலிருந்து ஜில்லா பாங்குகளிலும் தேவைக்கு மேற்பட்ட பணம் குவிந்து கிடக்கிறதென்றும், அவை மாகாண பாங்குகளிடம் பணத்திற்குப் போகவேண்டிய நிலையில் இல்லை என்றும் தெரிகிறது. இதன் பயனக எஞ்சிய பணம்யாவும் சர்க்கார் பத்திரங்கள் வாங்குவதிலும், இன்னும் இதுபோன்ற துறையிலும் போடப்பட்டு அதனல் குறைந்த வருமானமே கிடைக்கிறது.

“வாலிபர்களே! வேலையற்ருேர்களே! கிராமங்களுக்குச் செல்லுங்கள்! விவசாயம் புரியுங்கள்!” என்ற பிரசாரம் இதுசமயம் நாடெங்கும் நடந்து வருகிறது. இந்த சமயத்தில் நகரவாசிகள் கடமை என்ன? கிராமங்களின் செல்வ நிலையை விருத்திசெய்ய நகரவாசிகள் தங்கள் பணத்தை உபயோகிக்க வேண்டுமேயன்றி வெறும் பத்திரங்களில் பக்காவான பாதுகாப்பென்று எண்ணிப் போடுவது முறையல்ல. அவ்விதம் செய்ததின் பயனகத்தான் நில விலை குறைந்துவிட்டது. கிராமங்கள் சீர்கேடடைந்து விட்டன.

கிராமச் சங்கங்களுக்கும் மாகாண பாங்கிற்கும் இடையில் ஜில்லா பாங்குகள் மாகாண பாங்கின் பணத்தை கிராமச் சங்கங்கள் பெருகிற காலத்தில் கமிஷன் ஏஜண்டுகள் போல் நடந்து கொள்ளுகின்றன. ஜில்லா பாங்குகள் சங்கங்களால் ஆக்கப்பட்டதென்பதைவிட மாகாண பாங்கின் சிருஷ்டிகள் என்ருல் பொருத்தமுடையதாக இருக்கும். போக்குவரத்து சாதனமும், தபால் இலாக்கா உதவியும் மலிந்துள்ள இக்காலத்தில் மாகாண பாங்கு கிராமச் சங்கங்களுடன் நேரிட்ட சம்பந்தம் வைத்துக்கொள்ளலாம். மாகாண பாங்கில் தேங்கிக்கிடக்கும் பணத்தை வெகு சுலபமாக கூட்டுறவு இலாக்கா உத்தியோகஸ்தர்களால் சிபார்சு செய்யப்படும் கிராமச் சங்கங்களுக்குக் கொடுத்து உதவலாம். கணக்குப் பரிசோதகர்களுக்கும் கிராமச் சங்கங்களுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருப்பதால் அவர்கள் சங்கங்களின் உண்மை நிலை, யோக்யதை, நாணயப் பொறுப்பு, ஆகியவற்றினை நன்கறிவர். அவர்களது அபிப்ராயத்தை அனுசரி

(22-ம் பக்கத் தொடர்ச்சி)

யிட்டு மூலதனம் சேர்த்திருக்கிறது; 10 லெட்ச ரூபாய் விவசாயிகளுக்குக் கடனகக் கொடுத்திருக்கிறது. நில அடமான பாங்குகளின் கிளை ஸ்தாபனங்கள் 38-லிருந்து 57 ஆக அதிகரித்திருக்கிறது. இவையாவும் அங்கத்தினர்களிடமிருந்து வரவேண்டிய பாக்கியை திருப்திகரமாக வசூலிப்பதுடன் மத்திய நிலஅடமான பாங்கிற்கு செலுத்தவேண்டிய பணத்தை தவணைப்படி கட்டிவருகின்றன. கூட்டுறவு சங்க சட்டத்தின் 1932-ம் ஆண்டின் திருத்தப்படி கூட்டுறவு இலாக்கா உத்தியோகஸ்தர்கள் டிகிரிகளை நிறைவேற்றி சங்கங்களுக்கு உதவி புரிய பூர்ண அதிகாரமளிக்கப் பட்டிருக்கின்றனர்.

த்து மாகாண பாங்கு நடந்துகொள்ளலாம். யூனியன்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென தீவிரமான பேச்சு நடந்து வருகிறது. அவ்விதம் யூனியன்களின் எண்ணிக்கையைக் குறைப்பது புத்திசாலித்தனமான காரியமா என்பதில் ஆட்சேபனை ஏற்படாதிருக்க முடியாது. **ஆனால் ஒன்று மாத்திரம் நான் நிச்சயமாகக் கூறுவேன். ஜில்லா பாங்குகளின் எண்ணிக்கையைக் குறைக்கவேண்டிய காலம் நெருங்கிவிட்டது. சிக்கனத்தின் பேரால் ஜில்லா பாங்குகளின் நிர்வாகசபை அங்கத்தினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதென்ற திட்டத்தை அமுலுக்குக்கொண்டு வருவதால் மாத்திரம் விசேஷமான நன்மை எதுவும் ஏற்பட்டு விடாது. இதனால் பிரமாதமான பணம் எதுவும் மிச்சப்பட்டு விடாது.**

மாகாண பாங்கு தனது பணத்தை கூட்டுறவு ஸ்தாபனங்களில் போட்டாலன்றி ஏனைய ஸ்தாபனங்களின் மூலம் 100-க்கு 3 விகிதத்திற்கு மேல் வட்டி பெறமுடியாது. எனவே, மாகாண பாங்கு ஒழுங்கான முறையில் நடத்தப்படும் கிராமச் சங்கங்களுக்கு 100-க்கு 4 விகிதம் வட்டிக்கும் பணம் கொடுத்தல் உசிதம் என்று கூறுவேன். அவ்விதம் மாகாண பாங்கு கிராமச் சங்கங்களுக்குக் கொடுக்கும் பக்ஷத்தில் அவை 100-க்கு 6 விகிதம் அங்கத்தினர்களுக்குக் கொடுக்க முடியும். ஒருசமயம் எங்காவது ஒரு இடத்தில் ஜில்லா பாங்கு இருக்கவேண்டியது அவசியமானதெனக் கருதப்படுமாகில் அத்தகைய பாங்குகள் மாகாண பாங்கிலிருந்து 100க்கு 4½ விகிதம் வட்டிக்குப் பணம்பெற்று கிராமச் சங்கங்களுக்குக் கொடுத்து அவை, அப்பணத்தை 100-க்கு 6 விகிதம் அங்கத்தினர்களுக்குக் கொடுக்குமாறு செய்யவேண்டும். முன் குறிப்பிட்ட வண்ணம் ஜில்லா பாங்குகள் எடுக்கப்படுமாகில் அவற்றில் கிராமச் சங்கங்களுக்குள்ள பங்குத்தொகை மாகாண பாங்கிற்கு மாற்றப்படவேண்டும். இம்மாதிரியானமுறை கையாளப்படுமாகில் அதனால் கிராமத்தின் செல்வ விருத்திக்கு உதவி ஏற்படுமென்றும், நிலவிலை பெருகுமென்றும், உறங்கிக்கிடக்கும் பல கிராமச் சங்கங்கள் புத்துயிர் பெறும் என்றும், கூட்டுறவு இயக்கமே புதியதோர் நிலையை அடையுமென்றும் நம்புகிறேன். நான் குறிப்பிட்ட பிரகாரம் மாறுதல் ஏற்படுமாகில் கிராமச் சங்கங்களை யூனியன்கள் மேம்பார்வையில் இருப்பதா? அல்லது ஜில்லா பாங்கின் மேம்பார்வையில் விடுவதா? என்ற பிரசினை ஓர் முடிவுக்கு வருவதுடன் அது சம்பந்தமாக நடைபெறும் விவாதம் ஒழியும். ஏனெனில் இத்தகைய மாறுதல் ஏற்படின் மேம்பார்வைப் பொறுப்பு கூட்டுறவு இலாக்காவைச் சேர்ந்ததாகி விடும். கூட்டுறவு இலாக்கா உறுப்பினரும் இப்பொறுப்பை ஏற்கப் பின்வாங்கமாட்டார்கள் என்பேன். இதன் மூலம் விவசாயிகளின் வீண்செலவும், அவர்களின் வரியின் சுமையும் குறைகிறதெனலாம். கூட்டுறவு இயக்கத்தின் நோக்கம் கிருஷிகளுக்கு சுலபமான முறையில் குறைந்த வட்டிக்கு தேவையானபோது பணம் கொடுத்து உதவுவதாகும். அதனைப் பொறுத்தே நான் கூறிய யோசனை உள்ளது.

148728




பதிவு எண் :



# குரு மருந்துகள்

எப்போதும் தங்க மெடல்களே பரிசு பெற்று வருகிறது.

## குழந்தை மருந்துகள் மிக விசேஷமானது.

குருமருந்துகள் உபயோகமாகாத வீடுகள் கிடையாது

(1) குரு கோரோஜனை மாத்திரை—மலத்தைக் கழித்து வியாதியை போக்கும்
(2) குரு கஸ்தூரி காரமாத்திரை
(3) குரு தைலம்—மகா சஞ்சீவியாக விளங்குகிறது.
(4) குரு பால் பவுடர்—மாட்டுப்பாலை தாய்ப்பாலுக்குச் சமானமாக்குகிறது
(5) குரு பாலர் டானிக்—ரத்தவிர்த்திக்கு சஞ்சீவி
(6) கக்குவானுக்கு குரு **K.** சொட்டு மருந்து—கைகண்டது
(7) குரு ஜீமா கழிம்பு—சகல சரப்பான்களுக்கும்
(8) சகலரண கழிம்பு—சகலவிதப் புண்பொடிகளுக்கு
(9) வயிற்றுக் கடுப்பு மருந்து
(10) தேரை நோய்—எலும்புருக்கி நோய்க்கு.
(11) குழந்தைகள் வயிற்றுக் கட்டிக்கு
(12) கெர்ப்ப ஊரல் என்கிற கிரந்தி ரோகத்துக்கு

☞ குழந்தைகளுக்கு இன்னும் மிக அருமையான மருந்துகள் இருக்கிறது.

தங்க மெடல் பரிசுகள்—உயர்ந்த நற்சாட்சியங்கள்
சதா பெற்று வருகிறது.

டாக்டர் ஏ. மதுரம், திருச்சி

Printed and Published by Dr. A. Mathuram at the Guru Medical Hall Press, Trichinopoly.